பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 30 திங்கட்கிழமை (14-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:192

# ரணில் மற்றும் ஐ.தே.க. தலைவர்களை தேர்தல் சமயத்தில் கைது செய்யச் சதி!

## அரசு திட்டம் தீட்டியுள்ளதாக குற்றஞ் சாட்டுகிறது அக்கட்சி

கொழும்பு,ஒகஸ்ட் 14

**அபாண்டமான குற்றச்சட்டுக்களைச் சுமத்தி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிமைசிங்கவையும் கட்சியின் ஏனைய முக்கிய தலைவர்களையும் தேர்தல் சமயத்தில் கைது செய்வதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சதித்திட்டம் தீட்டியிருக்கின்றது.**

**- ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் அரசுமீது இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

மக்களுக்கு எதிரான அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டத்தை அரசு நிறைவேற்ற முயன்றது. மகா சங்கத்தினர் ஏனைய மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பொதுநல அமைப்புக்கள் எனப் பல தரப்பினரின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் ஐ.தே.கட்சி அந்த முயற்சியை முறியடித்தது. அதனால் அரசு ஐ.தே.கட்சி மீது ஆத்திரம் கொண்டுள்ளது.

இதே சமயம் அரசுத் தரப்பின் சில உறுப்பினர்கள், மக்கள் விரும்புகின்ற ஐ.தே.கட்சியின் கொள்கையை ஆதரித்து ஒத்துழைப்புத் தரவுள்ளனர் என்றும்-

இதனால் ஐ.தே.க. மீது சீற்றம் கொண்டுள்ள அரசு, அக்கட்சி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் குறைப்பதற்காக சதி வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது.

- இவ்வாறு ஐ.தே.கட்சியின் தலைமையகம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் விரைவில் கைது!

பட்டலந்தை சித்திரவதை முகாம் தொடர்பான முக்கிய சந்தேகநபர் எனக் கருதப்படும் முன்னாள் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் -

அந்த முகாமுடன் தொடர்புடையவராகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எந்தநேரத்திலும் கைது செய்யப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் நேற்றுப் பரவலாகப் பேசப்பட்டது.

ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்க முனைந்த கொலைகாரக் குழுக்களுடன் ரணில் விக்கிரமசிங்க சேர்ந்து செயற்பட்டார் என தற்போது பொலீஸாரின் விசாரணைக்கு உட்படுத் தப்பட்டிருக்கும் முன்னாள் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் விசாரணைகளின் போது தெரி வித்தார் என அரச ஊடகங்கள் கடந்த சில தினங்களாக செய்தி வெளியிட்டு வரும் வேளையில் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்படுவார் என அதிகாரபூர்வ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்ததாக பி.பி.ஸி. குறிப்பிட்டது. (உ-4-7)

### கம்பஹாவில் நடந்த

## ஐ.தே. கட்சிக் கூட்டம் மீது குண்டர் குழு தாக்குதல்!

கம்பஹா மாவட்டத்தில் நேற்று ஐ.தே.கட்சியினர் நடத்திய மாபெரும் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றியோர் மீது கறுப்புத் துணியால் முகத்தை மூடிக் கட்டியபடி 'டபிள்-கப்' வாகனத்தில் திடீரென வந்து குதித்த குண்டர் குழு ஒன்று மோசமாகத் தாக்குதல் நடத்தியது. இதனால் 7பேர் காயமடைந்தனர். அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பெரிய - தடல்புடலான - ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்தப் பொதுக் கூட்டத்தை ஒட்டி பெரிய அளவிலான பதாகைகளும், கொடிகளும் பரவலாகப் பல இடங்களிலும் கட்டப்பட்டிருந்தன.

ஐ.தே.கட்சியின் தவிசாளர் கரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கு மாகாணசபையின்

## 25 உயர் அதிகாரிகள் யாழ். படையெடுப்பு!

யாழ்ப்பாணம்,ஒக.14

யாழ்ப்பாணத்தில் நாளை முதல் இடம்பெறவுள்ள கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உயர் அதிகாரிகள் பலரும் நாளை இங்கு வரவிருக்கின்றனர்.

- மாகாணசபையின் பிரதம செயலர், அமைச்சுக்களின் செயலர்கள், பணிப்பாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் என இருபத்தியைந்துக்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகள் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் நாளை இங்கு வந்து சேருவர்.

யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம், இடம்பெயர் சேவை ஆகியவற்றில் பங்குபற்றும் இந்த அதிகாரிகள் சில தினங்கள் இங்கு தங்கி நின்று தமது அமைச்சுடன் தொடர்புடைய திணைக்களங்களின் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அம்பனிலிருந்து மக்கள் பெயர்வு

வடமராட்சி,ஒக.14

வடமராட்சி கிழக்கில் குடத்தனை, அம்பன் ஆகிய கிராமங்களில் இருந்து இடம்பெயந்த பொது மக்கள் சுமார் 300பேர் நேற்று பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்தனர்.

அந்தப் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் துண்டுப் பிரசுரம் ஒன்று ஒட்டப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டதை அடுத்தே அந்தப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறைக்கு வந்தசேர்ந்த இவர்கள் பாடசாலைகளிலும், நண்பர்கள்,உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். (உ-3-109-173)

## புளொட் உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,ஒக.14

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள புளொட் முகாம் மீது நேற்று அதிகாலை 3 மணியளவில் இனம் தெரியாதோர் தாக்குதல் நடத்தியதியதில் தமது இயக்க உறுப்பினரான சிவகுமார் என்பவர் உயிரிழந்ததாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

திடீரென இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும்-

பதில் தாக்குதல் நடத்தியபோது தாக்குதல் நடத்தியவர்கள் தப்பியோடிவிட்டனர் என்றும்-

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-3-164)

## 3 நாள்களாக தென்மராட்சியில் குண்டுவீச்சு!

தென்மராடசி,ஒக.14

தென்மராட்சிப்பகுதிகளில் கடந்த மூன்று தினங்களாக விமானப்படையின் விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தி வருகின்றன.

தினமும் குறைந்தது நான்கு தடவைகள் விமானங்கள் வட்டமிட்டுச் செல்வதைக்காண முடிகிறது. (உ-117)

### 'ராகிங்' தாக்குதலுக்கு உள்ளான

## ஷாஜகானின் உடல் நிலை கவலை தருவதாகத் தகவல்

### வரப்பிரகாஷ் போன்ற அதே பாதிப்பு

'ராகிங்' கொடூரத்தை எதிர்த்ததற்காக யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களால் மோசமான முறையில் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவன ராஜரட்ணம் ஷாஜகானின் உடல் நிலை குறித்து யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இத்தாக்குதலினால் மாணவனின் சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் -

இரத்தத்தில் இருந்து திரவக் கழிவை சிறுநீரகம் பிரித்தெடுக்கும் செயற்பாடு மந்தமடைந்திருப்பதாகவும் -

விசேட வைத்திய கவனிப்புக்கு அவர் உட்படுத்தப்பட்டிருப்பதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈச்சமோட்டையில் வீழ்ந்த ஷெல்லினால் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஒக.14

யாழ். கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டைப் பகுதிகளில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் ஒருவர் காயம் அடைந்தார்.

ஈச்சமோட்டையைச் சேர்ந்த கே.மாட்டின் (வயது58) என்பவர் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அந்தபபகுதியில் மூன்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன என்றும்-

அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த சுமார் 20 குடும்பங்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்தன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(உ-3-9-15-17-139-173)

### வியாழன் நடைபெறும் சேவைக்கு

## பயண அனுமதிப்பத்திரம் இன்று வழங்கப்படும்

எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ" கப்பல் சேவையில் பயணம் செய்யவிருப்பவர்களுக்கான பயண அனுமதிப் பத்திரங்கள் (Travel Permit) இன்று காலை 10 மணி முதல் வழங்கப்படவிருக்கின்றன என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

பதிவு செய்தவர்களில் 'ஈ' வரிசையில் உள்ளவர்களில் முன்னுரிமை அடிப்படையில் நூறு பேருக்கு பயண அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவிருக்கின்றன என்றும்-

அந்தப் பத்திரத்தை பயணச் சீட்டு வழங்கும் முகவரிடம் சமர்ப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பட்டதாரிகளின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

மட்டக்களப்பு,ஒக.14

மட்டக்களப்பில் வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டிருந்த சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. கணேசமூர்த்தி உண்ணாவிரதிகளை நேற்று நேரில் சந்தித்து வழங்கிய உறுதி மொழியை அடுத்தே இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

தமது அரசாங்கம் 3 மாதத்தின் பின்னர் பல தொழிற்சாலைகளை இந்த மாவட்டத்தில் அமைக்கவிருக்கின்றது என்றும் -

அந்தத் தொழிற்சாலைகளில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பூந்தோட்ட அகதிகளும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்

வவுனியா,ஒக.14

நிவாரணத்துக்கான பணத்தை உடன் வழங்கக் கோரி வவுனியா பூந்தோட்டம் அகதிமுகாம் அகதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டமும் நேற்றுக் கைவிடப்பட்டது.

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ், வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு பிரதி அமைச்சரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.சுமதிபாலா ஆகியோர் அகதிகளுடன் நடத்திய பேச்சை அடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தவர்களில் மயக்கமடைந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இந்தியா தரும் ரோந்துக் கப்பலிலேயே கடற்படையின் ஹெலி அணி இயங்கும்

கொழும்பு,ஓக.14

இந்தியா இலங்கைக்கு விற்கவிருக்கும் "ஐ.என்.எஸ்.ஷர்தூர்" ரோந்துக் கப்பல் 101மீற்றர் நீளமுடையது. ஆயிரத்து எண்ணூறு தொன் எடையைக் காவிச் செல்லக்கூடியது.

இந்தக் கப்பலில் ஹெலிக்கொப்டர் இறங்கித் தரித்துநிற்கும் வசதியும் இருக்கும்.

ஒரே சமயத்தில் 80ஹெலிக்கொப்டர்கள் வரை இக்கப்பலில் தரித்து நிற்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய ஹெலிக்கொப்டர் அணி ஒன்றை தனக்கென அமைக்கவிருக்கும் ஸ்ரீலங்கா கடற்படை அந்த அணியின் செயற்பாட்டுக்குப் பெரும்பாலும் இந்த ஒரே கப்பலையே பயன்படுத்தும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் -

இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டின் கடற்படை தேவைப்படும் போது விமானப்படையிடமிருந்து உதவி பெறுவதற்குப்பதிலாக தனக்கென தனியான விமான அணியொன்றை உருவாக்க வேண்டிய தேவை உள்ளதா என்ற சர்ச்சையும் கிளம்பியுள்ளது.

முற்றிலும் கடலால் சூழப்பட்ட இலங்கையின் கரையோர ரோந்தில் ஈடுபட்டிருக்கும் கடற்படைக்கு இத்தகைய ஹெலிக்கொப்டர் அணி அவசியம் என்கின்றன கடற்படை உயர் வட்டாரங்கள்.

இலங்கை விமானப்படையிலிருந்து ஓய்வுபெற்ற விங் கொமாண்டர் சுனில் கப்ரல், குறூப் கப்டன் ரஞ்சித் யாப்பா, ஸ்குவாட்ரன் லீடர் றொமேஸ் மெண்டிஸ் ஆகியோரை கடந்த முதலாம் திகதி முதல் முறையே கொமடோர், கப்டன், கொமாண்டர் ஆகிய தர நிலைகளோடு தனது தொண்டர் சேவையில் இலங்கைக் கடற்படை இணைத்துள்ளது.

இவர்களே இலங்கைக் கடற்படையின் ஹெலிக்கொப்டர் அணியை நிலை நிறுத்துவதற்கான பூர்வாங்க வேலைகளை மேற்கொள்வதாகத் தெரிகின்றது.

இலங்கைக் கடற்படையின் ஹெலிக்கொப்டர் அணி அனேகமாக இலகு ரக ஹெலிக்கொப்டரையே - பெரும்பாலும் இந்தியத் தயாரிப்பு 'ஷேட்டக்' ஹெலிகளையே - பயன்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியா வழங்க முன்வந்துள்ள ரோந்துக் கப்பலும், அதில் இயங்கும் கடற்படையின் ஹெலிக்கொப்டர் அணியும் விடுதலைப்புலிகள் நாட்டுக்குள் ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களை கடல் வழியாகக் கடத்தி வருவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கும் என கடற்படை அதிகாரிகள் நம்புகின்றார்கள். இந்தக் கப்பலில் வலுமிக்க தாக்குதல் ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருப்பதுடன் இரவு நேரத்திலும் கூட சிறப்பான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக நவீன கருவிகளையும் அது கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# படைக்கு 20ஆயிரம் பேரைத் தரமுடியும்! சந்திரிகாவின் சவாலை ஏற்கிறார் தேரர்

கொழும்பு,ஓக.14

இராணுவத்துக்கு 20 ஆயிரம் பேரைத் திரட்டித் தருமாறு ஜனாதிபதி விடுத்த சவாலை நிபந்தனையுடன் ஏற்றுள்ளார் கொழும்பு கங்காராமய விகாரையின் பிரதம குருவான வண. கலகொட ஞானஸார தேரர்.

கடந்த வெள்ளியன்று ரூபவாஹினியில் உரையாற்றிய ஜனாதிபதி - படைகளுக்கு 20 ஆயிரம் பேரைத் திரட்டித்தர சிங்களத் தீவிர அமைப்புகளால் முடியமா என்றும்-

அமைதியான அரசியல் தீர்வன்றி இராணுவத் தீர்வே புத்த பிக்குகளுக்குத் தேவை என்றால் அவர்கள் தங்கள் சம்பளத்தை அரைவாசியாகக் குறைக்கத் தயாரா என்றும் -

கேள்வி எழுப்பியிருந்தார்.

"நாட்டில் பற்றுக்கொண்ட ஒரு குடிமகன் என்ற வகையில் இந்த நாட்டில் உள்ள பௌத்த குருமாரின் சார்பில் இச்தச் சவாலை ஏற்கிறேன்" என்று வண. ஞானஸார தேரர் இந்தச் சவாலுக்குப் பதிலளித்திருக்கிறார்.

ஒருவார காலத்துக்கு அரச தொலைக்காட்சியில் தினமும் பத்து நிமிடங்களையும் அரச தினசரிகளில் முன்பக்கத்தில் விளம்பரம் வெளியிட வசதியையும் செய்து தர ஜனாதிபதி முன்வர வேண்டும் என்று அவர் நிபந்தனை விதித்துள்ளார்.

இந்த நிபந்தனையை ஏற்று அதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி செய்து தந்தால் 20ஆயிரம் பேரைப் படையில் இணைத்துத் தருவேன் என்று அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியும் அவரது அமைச்சர்களும் தமது சம்பளத்தில் அரைவாசியையும் தமது வாகனங்களையும் படையினரிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படிச் செய்தால் மகாசங்கம் அரைவாசிச் சம்பளத்தைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றது என்றும் அவர் மேலும் சொன்னார்.

முறையான திட்டமிடல் மூலம் யுத்தம் முன்னெடுக்கப்பட்டால் மேலும் ஒருலட்சம் பேரைப் படையில் சேர்க்க முடியும். யுத்தத்துக்கு தன்னை அரசு முழுமையாக அர்ப்பணிக்குமாயின் இளைஞர்களிடம் சென்று தியாகம் செய்ய முன் வருமாறு குருமார்கள் கோரமுடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.(உ-3)

## மிதிவெடியில் சிக்கிய சிப்பாய்

மட்டக்களப்பு,ஓக.14

மட்டக்களப்பு மயிலம்பாவடியில் மிதிவெடியில் சிக்கிய சிப்பாய் ஒருவர் தனது இடது காலை இழந்தார்.

நேற்று முன்தினம் இரவு முகாம் சுற்றாடலைத் துப்புரவு செய்து கொண்டிருந்த வேளையிலேயே இவர் மிதிவெடியில் சிக்கியதாகக் கூறப்பட்டது. (உ-4)

## வன்னிக்குப் பசளை வகை

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு 14 லொறிகளில் பசளை வகைகளும்,மடுவுக்கு 6 லொறிகளில் உணவுப் பொருள்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மேலதிக அரசஅதிபர் சி. இரகுநாதபிள்ளை தெரிவித்தார்.

கிளிநொச்சி,மன்னார் மாவட்டங்களுக்கு பசளைகளும் மடு தேவாலய உற்சவத்தில் கலந்து கொள்ள வரும் பக்தர்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் 6 லொறிகளில் உணவுப் பொருள்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-4)

## 'நல்லைக் குமரன்' இன்று வெளியீடு

யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவினால் வருடந்தோறும் வெளியடப்படும் 'நல்லைக் குமரன்' மலர் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு மாநகர ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் தலைமையில் நல்லூர் இந்து விடுதி முன்றலில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவரும் இந்து நாகரிகத் துறையின் முதுநிலை விரிவுரையாளருமான திருமதி நாச்சியார் செல்வநாயகம் மலரின் ஆய்வுரையை நிகழ்த்துவார். நூல் வெளியீட்டு விழாவின் முன்னோடி நிகழ்ச்சியாக காலை 8.30 மணிக்கு நல்லூர் தேவஸ்தான வித்துவான் அளைவெயூர் என்.கே.பத்மநாதன் குழுவினரின் நாதஸ்வர இசை இடம் பெறும். (உ-7)

# கல்விப் பிரச்சினைகள் குறித்து யாழ்.செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் கல்விசார் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கென எதிர்வரும் 17ஆம் திகதி யாழ். செயலகத்தில் விசேட கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடை பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர்க.பரமேஸ்வரன், மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம் பிள்ளை, யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் மற்றும் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (உ-7)

## ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் நாளையும் நாளை மறுதினமும் குழுவின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜீ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள், ஆணையாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வர். (உ-7)

## தீக்காயங்களுக்கு உள்ளான இருவர்

யாழ்ப்பாணம்,ஓக.14

குடும்பத்தகராறு காரணமாக தனக்குத்தானே தீ மூட்டித் தற்கொலை செய்ய முயன்றதாகக் கூறப்படும் பெண்ணும் அவரைக் காப்பாற்ற முயன்ற அவரது கணவனும் எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

சுன்னாகம் பகுதியில் இடம் பெற்ற இந்தச்சம்பவத்தில் யாழ். மாநகரசபை சுகாதாரத் தொழிலாளியான 31 வயது இளைஞரும்,30 வயதுடைய மனைவியுமே தீக்காயங்களுக்கு உள்ளாகினர்.

மனைவிஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9-15)


## பிறந்த நாள் நல்வாழ்த்து

யாழ். கச்சேரியடியைச் சேர்ந்த எமது ஆருயிர் நண்பன்

**செல்வன் சிதம்பரநாதன் டென்சன்**

(டொக்கா)

இன்று தனது 18 ஆவது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவருக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

த.றொசான், து.எட்மன்
(நண்பர்கள்)

யாழ்ப்பாணம் (C/12494)



## தரம் - 5 புலமைப் பரிசில் - இறுதிப்பரீட்சை

வினாத்தாள்களை விடைகளுடன் இன்று முதல் கீழ்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

★ பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
★ கலைவாணி கல்வி நிலையம், கோப்பாய்.
★ அருள்விநாயகர், புத்தூர்.
★ சூர்யா மருந்தகம், அச்சுவேலி,ஆவரங்கால்.
★ மொடேன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
★ மதுரா, நீர்வேலி. ★ பிரியங்கா, உடுப்பிட்டி.
★ அம்பிகா புத்தகசாலை, பருத்தித்துறை.
★ வள்ளுவர் அக்கடமி, உரும்பிராய்.
★ துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்.
★ நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.
★ வலம்புரி புத்தகசாலை, வட்டுக்கோட்டை.
★ லக்கி புத்தகசாலை, சித்தன்கேணி.
★ ஸ்கைளாக் ஏஜென்ஸி, சுழிபுரம்.
★ புஸ்பநாதன் கடை, சங்கானை.
★ ஐயா கடை, பண்டத்தரிப்பு.

(77289)



## பெண் உதவியாளர் தேவை

சுன்னாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பாமஸிக்கு அனுபவமுள்ள பெண் பிள்ளை தேவை.

*தொடர்பு:-*

*ராஜா கொம்பிளெக்ஸ்*

கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

*தொடர்பு கொள்ளவேண்டிய நேரம் :-* மாலை 3.00 - 6.00 மணி வரை.

(77288)



## ஜெப ஆராதனை

10.08.2000 அன்று கொழும்பில் வீதி விபத்தில் சிக்குண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்த

**திரு.திருமதி சாம் குணரட்ணம்**

அவர்களின் மகள்

**மேபிள் சுதர்சினி குணரட்ணம்**

அவர்களின் அடக்க ஆராதனை 12.08.2000 சனிக்கிழமை நுகேகொடையில் நடைபெற்றது.

அன்னாரின் பெற்றோர், சகோதரர்களின் ஆறுதலுக்காக ஜெப ஆராதனை நாளை (15.08.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டுக்குளியில் உள்ள இலக்கம் 15,சோமசுந்தரம் அவனியூ இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஜெபத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
சி.சி.அருமைநாயகம் (மாமா)
கோப்பாய்
திருமதி D.S.ஆனந்தநாயகம் (மாமி)
உடுவில்

(C/124393)



## மரண அறிவித்தல்

தென்புலோலியூர்

**திருமதி லிங்கேஸ்வரி தில்லையம்பலம்**

தென்புலோலியூரைச் சேர்ந்த திருமதி லிங்கேஸ்வரி தில்லையம்பலம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சொக்கலிங்கம் ஆகியோரின் மகளும், திரு.சரவணமுத்து தில்லையம்பலத்தின் அருமை மனைவியும், திருமதி தேவிகா இரவீந்திரன், திரு.தி.லிங்கரத்தினம்(நீர்கொழும்பு), செல்வி தி.சாந்திகா (பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், பருத்தித்துறை), விஜயரேகா (தற்காலிக உதவி விரிவுரையாளர் றுகுணு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ந.இரவீந்திரன்(ஆஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமியாரும், திரு.சொ. விநாயகலிங்கம் (இளைப்பாறிய பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர்), திருமதி லிங்கநாயகி (வவுனிக்குளம்), காலம் சென்ற திருமதி க.லிங்கராணி, திரு.சொ.அரியலிங்கம் (அதிபர், துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பா), திரு.சொ.கிருஷ்ணலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திரு.ச.சிவானந்தம் (இளைப்பாறிய ஓவசியர்,வவுனிக்குளம்), திரு.சி. கருணானந்தம் (இளைப்பாறிய தொலைத்தொடர்பு பரிசோதகர்), திருமதி.வி.சுசீலாதேவி (திருகோணமலை),திருமதி.அ.பரமேஸ்வரி, திருமதி சி.கலைச்செல்வி ஆகியோரின் மைத்துனியும் வி.சிவபரன்(கலிபோர்னியா பல்கலைக்கழக மாணவன்), வி.மேனகா (யாழ்.மருத்துவபீட மாணவி), அ.சுதாபரன் (ஹாட்லிக் கல்லூரி மாணவன்), அ.கலைவதனி (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மாணவி), கி.சுஜனி (கனடா), கி.சுஜந்தன் (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், கி.சசிரஜனி (யாழ். நுண்கலைப்பீட மாணவி) அவர்களின் அன்புப் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (14-08-2000) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

லிங்க பவனம்,
தென்புலோலி.

தகவல்:
திரு.சொ.அரியலிங்கம்.
(சகோதரன்)

(77291)

## தீவிரவாதிகளின் மிரட்டல் எதிரொலி

# வெடிகுண்டுப் பீதியின் மத்தியில் நாளை இந்திய சுதந்திர தினம்

## மாநிலங்கள், யூனியன்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

புதுடில்லி,ஓகஸ்ட்14

**காஷ்மீர் தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சுறுத்தல்களால் ஏற்பட்டுள்ள பீதியின் மத்தியில் நாளை இந்தியா தனது சுதந்திர தினத்தை கொண்டாட உள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்துமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.**

இந்தியாவில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும், பாதுகாப்புபடையினரின் நிலைகள் மீதும் அடுத்த சில நாள்களில் பாரிய தாக்குதல்களை நடத்தப் போவதாக ஹிஸ்புல் முஜாகிதீன், லக்சர் இ.தொய்பா ஆகிய தீவிரவாத அமைப்புக்கள் பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளன. ஜம்முவில் பெரிய அளவிலான தாக்குதல்களை நடத்தும் திட்டம் தொடர்பாக தீவிரவாதிகளின் வயர்லெஸ் உரையாடலை இடைமறித்துக் கேட்ட இராணுவம் அது குறித்து எச்சரித்துள்ளது.

இவற்றை அடுத்து தலைநகர் புதுடில்லியில் நுழைவுப் பகுதிகளில் தடைகள் ஏற்படுத்தித் தீவிர சோதனைகள் நடைபெற்று வருவதாகவும், காஷ்மீர் உட்பட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய இராணுவத்துணைப்படையினர் அனுப்பப்பட்டு அந்தப் பகுதிகளின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

காஷ்மீரில் பலத்த பாதுகாப்பின் மத்தியிலும் சமீபத்தில் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடுகளையும், வெடிகுண்டுத் தாக்குதல்களையும் நடத்தியிருப்பதால், மகிழ்ச்சியுடனும் எழுச்சியுடனும் கொண்டாடப்பட வேண்டிய நாட்டின் சுதந்திர தினத்தை இந்திய மக்கள் அச்சத்துடனேயே இந்த வருடம் எதிர்கொள்வது குறிப்பிடத்தக்கது.

## ராஜ்குமார் கடத்தல் குறித்து ரஜனி - கருணாநிதி ஆலோசனை

ராஜ்குமார் கடத்தப்பட்டது தொடர்பாக நடிகர் ரஜனிகாந்துடனும் மாநில உயர் அதிகாரிகள் மற்றும் 'நக்கீரன்' கோபால் ஆகியோருடனும் திமுக முதல்வர் கருணாநிதி ஆலோசனைகள் நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி எதிர்வரும் 16 அல்லது 17 ஆம் திகதி கோபால் மீண்டும் வீரப்பனைச் சந்திக்கச் செல்வார் என்றும் இந்தமுறை கோபால் வீரப்பனிடம் இருந்து நடிகர் ராஜ்குமார் உட்பட கடத்தப்பட்ட 4 பேரையும் மீட்டு வருவார் என்றும் தெரிவித்தார்.

நடிகர் ரஜனிகாந்துடன் நடத்திய பேச்சுக் குறித்த விவரங்களை வெளியிட கருணாநிதி மறுத்து விட்டார்.

இதற்கிடையில் கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா தமிழை கர்நாடகத்தில் இரண்டாவது ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற வீரப்பனின் கோரிக்கையை நிராகரித்ததுடன், ஏற்க இயலாத கோரிக்கைகளை விதிக்கவேண்டாம் என்று வீரப்பனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வீரப்பன் குறிப்பிட்டுள்ள தமிழ்த்தீவிரவாதிகள் யார்?

### சட்டத்தரணி வெளியிட்ட தகவல்கள்

வீரப்பன் விடுவிக்கக் கோரியுள்ள தமிழ்த் தீவிரவாதிகள் பொலீஸ் நிலையங்களைத் தாக்கி பொலீஸாரைக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் என்று அவர்களின் சட்டத்தரணி சங்கரசுப்பு வெளிநாட்டு செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

தற்போது தமிழக சிறையில் சீனு என்கிற வெங்கடேசன், சுந்தரம், இளவரசன், சத்தியமூர்த்தி, மணிகண்டன், முத்துக்குமார், பொன்னிவளவன் ஆகிய தமிழ்த் தீவிரவாதிகள் அடைக்கப்பட்டுள்ளதாகவும் -

கடந்த 1991ஆம் ஆண்டு அன்னக்கிளி என்ற பெண் மீது பாலியல் பலாத்காரம் நடைபெற்றதாகக் கூறப்படும் காவல்நிலையத்தைத் தாக்கி ஒரு பொலீஸ்காரரைக் கொன்றது.

93ஆம் ஆண்டு இரண்டு விசாரணைக் கைதிகள் இறந்தது தொடர்பாக குள்ளஞ்சாவடி பொலீஸ் நிலையத்தைத்தாக்கி ஒரு பொலீஸ்காரரைக் கொன்றது.

ஆண்டிமடம் பொலீஸ் நிலையத்தில் 98ஆம் ஆண்டு ஆயுதங்களைச் சூறையாடியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் இந்தத் தீவிரவாதிகள் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் சங்கரசுப்பு தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தமிழர் பிரச்சினை தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்திய 84ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்நாடு விடுதலைப் படையும் ராஜீவ் கொலை நடந்த சமயத்தில் தமிழ் நாடு மீட்சிப் படையும் உருவாகியிருந்தன.

தமிழகத்தை இந்திய அரசிலிருந்து பிரித்து தனி நாடாக்க வேண்டும் என்பதே இவர்கள் இலட்சியமாகக் கொண்டிருந்தனர்.

இந்த அமைப்புகள் ப்ர்கூர், தர்மபுரி மற்றும் சேலம் போன்ற வீரப்பன் நடமாடும் இடங்களில் வேருன்றி இருந்ததும் -

பொலீஸாரின் தீவிர தேடுதல்களில் இருந்து தப்புவதற்காக தீவிரவாதிகள் காட்டுக்குள் தலைமறைவாகியதும் வீரப்பனுக்கு இவர்களுடன் தொடர்பு ஏற்படக் காரணம் என்று கருதப்படுகிறது. (ஒ-5)


### வீரப்பனைப் பிடிக்க முடியாத

## தமிழக அரசை ஆட்சியிலிருந்து நீக்க சுப்பிரமணியசுவாமி கோரிக்கை

சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பனைக் கைதுசெய்து தண்டிப்பதில் தமிழக அரசுக்கு நிர்வாகத் திறமை போதவில்லை. அதனால் தமிழக அரசை ஆட்சியை விட்டு விலக்கித் தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஜனதாக் கட்சித்தலைவர் சுப்பிரமணியசுவாமி சென்னையில் செய்தியாளர்களிடம் பேசும் போது கூறினார்.

விடுதலைப் புலிகளால் பயிற்றுவிக்கப்பட்ட தமிழ்த் தீவிரவாதிகளின் கருவியாக வீரப்பன் மாறிவிட்டதாகவும்,



வீரப்பனின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அவரிடம் சரணடைந் திருக்கும் தமிழக,கர்நாடக அரசுகளின் நிலைமை பரிதாபமாக உள்ளது என்றும் - இந்த நிலை தொடர்ந்தால் போராட்டம் நடத்தப்போவதாகவும் சுப்பிரமணிய சுவாமி மேலும் தெரிவித்தார். (ஒ)

## இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் பாகிஸ்தானுடன் பங்கேற்க மறுப்பு

சண்டிகர்,ஓக.14

இந்தியாவுக்கு எதிராக மேற்கொண்டுவரும் மறைமுகப் போரைத் தொடர்ந்து நடத்தும் பாகிஸ்தானுடனான எந்தவொரு விளையாட்டுப் போட்டிகளிலும் இந்திய அணிகள் பங்கேற்கப்போவதில்லை.

இவ்வாறு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் சுக்பீர் சிங் பீஷா சண்டிகரில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எல்லைக்கப்பால் இருந்து பயங்கரவாதத்தை ஏவிவிடும் பாகிஸ்தானின் நடவடிக்கைக்குப் பதிலடியாகவே இந்தியா இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர்,

கனடாவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பாகிஸ்தானுடனான கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணிகலந்துகொள்ளாது என்ற மத்திய அரசின் அறிவிப்பை தான் வரவேற்பதாகவும் கூறினார்.

## சென்னையில் இலங்கையர் கைது

சென்னை,ஓக.14

தமிழ்நாடு போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் சென்னையில் இலங்கையர் ஒருவரிடமிருந்து 31 லட்சம் ரூபா பெறுமதியான 310 கிராம் போதைப்பொருளைக் கைப்பற்றியுள்ளனர். போதைப்பொருளைப் பதுக்கி வைத்திருந்த இலங்கையர் கைது செய்யப்பட்டார்.

உலக அரங்கில்

## வெளியுறவு அமைச்சர் எச்சரிக்கை

டெல்அவிவ்,ஓக.14

யசீர் அரபாத் எதிர்வரும் செப்டெம்பர் 13ஆம் திகதி பலஸ்தீனத் தனிநாடு பிரகடனம் செய்தால் மேற்காசிய சமாதான முயற்சிகளுக்கு மிகப்பெரிய ஆபத்தை அது விளைவிக்கும் என்று இஸ்ரேலிய இடைக்கால வெளியுறவு அமைச்சர் பிலோமோ பென் அமி எச்சரித்துள்ளார்.

டேவிட் லெவியின் ராஜினாமாவை அடுத்து இவர் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### போருக்கு வழிவகுத்தாலும்

## காஷ்மீருக்கு இராணுவத்தை பாகிஸ்தான் அனுப்பவேண்டும்

### முஜாஹிதீன்கள் வலியுறுத்தல்

இந்தியாவுடன் மீண்டும் யுத்தம் நடத்தும் நிலைக்கு வழிவகுத்தாலும் அது குறித்துக் கவலைப்படாமல் பாகிஸ்தான் தனது இராணுவத்தை காஷ்மீருக்கு அனுப்பவேண்டும் என்று ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் தலைவர் சையத் சலாவுதீன் வலியுறுத்தியுள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அந்தப் பேட்டியில், 'போரையே முஜாஹிதீன்கள் விரும்புகின்றனர். போர்தான் பிரச்சினைக்கு தீர்வாக அமையும்.

ஆகவே காஷ்மீரில் பாகிஸ்தான் நேரடியாகக் களமிறங்கித் தமது படையை அனுப்பவேண்டும்'.

இவ்வாறு சலாவுதீன் தெரிவித்துள்ளார்.

### 113 பேரைப் பலி கொண்ட

## "கொன்கோட்" விமான விபத்துக்கு சிறிய இரும்புத்தகடே காரணமாம்

### நிபுணர்கள் அறிக்கையில் தகவல்

பாரிஸ்,ஒக.14

கடந்த மாதம் பிரான்ஸில் இடம்பெற்ற நூற்றுப்பதின்மூன்று பேரைப் பலி கொண்ட 'கொன்கோட்' விமான விபத்துக்கு கூரான சிறிய இருப்புத் தகடு ஒன்றே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி பாரிஸ் விமான நிலையத்தில் இருந்து கிளம்பிய 'கொன்கோட்' விமானம் ஒன்று தீப்பிடித்து எரிந்த படி தங்கும் விடுதி ஒன்றின் மேல் விழுந்து நொறுங்கியது.

இந்த விபத்துக் குறித்து விசாரணை மேற்கொண்ட பிரெஞ்சு நிபுணர்கள் குழு தனது அறிக்கையை வெளியிட்டது.

விமான ஓடுபாதையில் கிடந்த 40சென்றிமீற்றர் அளவுடைய கூரான இருப்புத்தகடு ஒன்று கொன்கோட் விமானத்தின் ஒரு சக்கரத்தில் சிக்கி அதைச் சேதமாக்கியுள்ளது. அந்த விமானம் மணிக்கு 315கிலோ மீற்றர் வேகத்தில் ஓடுபாதையில் இருந்து கிளம்பி மேலே சென்ற சமயம், இரும்புத் தகட்டால் சேதமான சக்கரம் வெடித்துள்ளது. அதன் காரணமாக எரிபொருள், கொள்கலன்கள் வெப்பமேறி வெடித்துத் தீப்பற்றியதால் விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.(ஒ-க-3)

## பிஜியில் கிளர்ச்சித் தலைவரின் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டு



சுவா,ஒக.14

பிஜியில் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட் மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று தலைநகர் சுவாவில் அமைந்துள்ள தலைமை நீதிமன்றத்தில் ஸ்பைட் மீதும் அவரது பாதுகாப்பு, அரசியல் ஆலோசகர்கள், மற்றும் ஸ்பைட்டின் இளைய சகோதரர் ஆகியோர் மீதும் தேசத்துரோக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பிஜியின் முன்னாள் அதிபர் ராட்டோசேர் கமிசேசே மாராவுக்கு எதிராகச் சதி செய்ததாகவும், யுத்தம் நடத்த முற்பட்டதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஸ்பைட் உட்பட குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

பிஜி சுதந்திரமடைந்ததிலிருந்து இதுவரை அங்கு எவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

### ஜேர்மனி ஜேர்மனியருக்கே

## புத்துயிர் பெற்று வரும் ஹிட்லரின் கொள்கை

பேர்லின்,ஒக.14

ஜேர்மனி, ஜேர்மனியருக்கே என்ற ஹிட்லரின் கொள்கை மீண்டும் உத்வேகம் பெற்றுவருகிறது.

ஜேர்மனியில் ஹிட்லரின் நாஜிக் கட்சிக் கொள்கைகளுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கும் நவநாஜிகள் என்ற அமைப்புக்கு பெருகிவரும் ஆதரவு இதனை உறுதிப்படுத்துவதாகவும்,

இதனால் வெளிநாட்டவர் மீதான கொடூரத் தாக்குதல்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எதிர்வரும் 13ஆம் திகதி ஹிட்லரின் கீழ் துணைத்தலைவராக இருந்த பொடல்கெஸ் என்பவரின் நினைவு தினத்தை பெரியளவில் அனுஷ்டிக்க நவநாஜிகள் தீர்மானித்திருப்பதால் ஜேர்மனியில் வெளிநாட்டவர் மீதான தாக்குதல்களைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டவர் மீது நவநாஜிகள் கொலைத் தாக்குதல்களை முன்னர் பல தடவைகள் மேற்கொண்டிருந்ததும் அவை தற்போது தணிந்திருப்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ-5)

## இந்தியாவிலுள்ள மியான்மர் மக்களை வெளியேற நிர்ப்பந்திக்க வேண்டாம்

### மன்னிப்பு சபை வேண்டுகோள்

புதுடில்லி,ஒக.14

இந்திய மாநிலமான மிஜோரமில் தங்கியுள்ள 'பின்' இனத்தைச்சேர்ந்த மியான்மர் மக்களை வெளியேறுமாறு நிர்ப்பந்திக்க வேண்டாம் என்று மாநில அரசிடம் பொது மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மியான்மரிலிருந்து குடிபெயர்ந்த 'பின்' இனத்தைச் சேர்ந்தவர்கள் கடந்த சில வருடங்களாக மிஜோரம் மாநிலத்தில் தங்கியுள்ளார்கள். சமீபகாலமாக மாநில அரசு இவர்களை வெளியேறுமாறு நிர்ப்பந்தித்து வருவதுடன் சிலரைப் போதை மருந்துக் கடத்தலில் ஈடுபடுவதாகக் கூறி மியான்மர் அரசிடம் ஒப்படைத்தும் வருகிறது.

'பின்' இனத்தவர்கள் மீதான மிஜோரம் மாநில அரசின் இத்தகைய நிர்ப்பந்தங்கள் கைவிடப்பட வேண்டும் என்று பொதுமன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மியான்மரில் தற்போது நடக்கும் இராணுவ ஆட்சியில் தம்மால் வாழ முடியவில்லை என்றும் அங்கு மீண்டும் ஜனநாயக ஆட்சி திரும்பும் வரை மிஜோரமில் தம்மை வாழ அனுமதிக்கும்படியும் 'பின்' இன மக்கள் கூறுகின்றனர். (ஒ-4)

# இடம்பெயர்ந்த வர்த்தகர்கள் நிவாரணம் பெற முடியாது அவதி

"உ" கார்ட் வைத்திருக்கும் சாவகச்சேரி நகர் வர்த்தகர்களில் சுமார் 400 பேர் தற்பொழுது இடம்பெயர்ந்து வருமானம் இழந்துள்ள போதிலும், தாம் வைத்துள்ள 'உ' கார்ட் காரணமாக அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணம் பெற முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

'உ' பங்கீட்டுஅட்டை வைத்திருப்பதனால் நிவாரணம் பெற்றுக் கொள்ளாதவர்த்தகர்களின் விவரங்கள் சாவகச்சேரி வணிகர் மன்றத்தினால் சேகரிக்கப்பட்ட போதே இந்தத் தகவல்கள் வெளியாகின. வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தகர்களே பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வந்தது.

வர்த்தக நிலையங்களில் உள்ள பொருள்கள் வீட்டு உடைமைகள் அனைத்தும் இழந்து உடுத்த உடையுடன் நிர்க்கதியான நிலையில் இடம் பெயர்ந்த வர்த்தகர்களின் 'உ' பங்கீட்டு அட்டைகளுக்கு நிவாரணம் பெறக் கூடிய வகையில் மாற்றங்கள் செய்ய வணிகர் மன்றமும் வர்த்தகர்களும் எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 – 07 – 1945 | 01 – 07 – 2000 |

அமரர்

### வல்லிபுரம் தர்மலிங்கம்

(மயிலணி வடக்கு, சுன்னாகம்)

எங்கள் குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (14-8-2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதுடன் அதன் பின் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.
(77286)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 – 04 – 1953 | 15 – 07 – 2000 |

### திருமதி சிவபாக்கியம் சற்குணலிங்கம்

[சண்முகலிங்கம்]

எம் குடும்பத்தின் திருவிளக்கே!
நீ ஏற்றிய ஒளியில்
நாம் வாழ்க்கையைக் கண்டோம்,
களித்தோம், பூரித்தோம்
எம் சின்னஞ் சிறிய இதயத்தில்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (14—08—2000) திங்கட்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்.

கண்ணன் லேன்,
இராஜ வீதி,
கோப்பாய் தெற்கு. (கோண்டாவில் கிழக்கு)
(77242)

## 5 ஆம் ஆண்டு நினைவு



### ந. சுகிர்தராஜன்

தோற்றம்: மறைவு:
26-10-60 14-08-95

நினைவு கூரும்

அம்மா,
சகோதரர்கள்.

இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(77278)

## ஏழாலை மத்தி விவசாய சம்மேளனம் அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஒக. 14

ஏழாலை மத்தி விவசாய சம்மேளனம் அப்பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவை தீர்க்கப்பட வேண்டிய வழிவகைகள் பற்றியும் காணி விவசாய அமைச்சர் டி. எம். ஜெயரட்ணாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

விவசாயிகள் தம் விளைச்சல்களை உரிய முறையில் சந்தைப்படுத்த உதவுமாறும் —

மலைநாட்டு மரக்கறி வகைகளின் விதைகள், விதை உருளைக்கிழங்கு மற்றும் நல்லின நெல் விதைகள் முதலியவற்றை உத்தரவாத விலையில் நேரடியாக விவசாயிகளுக்கு பெற்றுத்தருமாறும்—

விளைச்சல் காலங்களில் தெற்கிலிருந்து விவசாய உற்பத்திப் பொருள்களை இங்கு அனுப்பாமல் பார்த்துக் கொள்ளும்படியும் —

நல்லினக் கால்நடைகளை இங்கு அனுப்பிவைக்குமாறும்

இப்பகுதி விவசாய உற்பத்திப் பொருள்களைத் தெற்கே கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்குமாறும் —

விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குமாறும் மகஜரில் கோரப்பட்டுள்ளது. (இ)

## கலந்துரையாடல்

மாகாணசபையின் எழுதுநர் மற்றும் அதனுடன் இணைந்த சேவையின் நியமனத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் டீ.எம். ஐ.கல்வி நிறுவனத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் ரீ. சிவகுகன் கேட்டுள்ளார். (இ-9)

## சாமி வேடத்தில் பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பறித்த ஆசாமி

### கசிப்பு அருந்திய நிலையில் சிக்கினார்

வலி. கிழக்கு, ஒக. 14

சாமி வேடம்போட்டுப் பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பெற்று வந்ததாகக் கூறப்படும் ஒருவர் கசிப்பு அருந்திய மயக்க நிலையில் பொதுமக்களிடம் சிக்கிய சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலி முடமாவடிப் பகுதியில் இடம்பெற்றது.


இந்த நபர் சாமி வேடம் போட்டு வீடுகளில் பல மாயை விளையாட்டுக்களைச் செய்து பொதுமக்களிடம் கோயிலுக்கு நிதி உதவி செய்யுமாறும் அல்லது தேங்காய் எண்ணெய் வழங்குமாறும் கேட்டுப் பணத்தினைப் பெற்று வந்தார் என்று கூறப்படுகிறது.

இவர் வெள்ளியன்று கசிப்பினை அருந்திவிட்டு வீதியில் மயக்க நிலையில் படுத்திருந்தபோதே தாம் ஏமாற்றப்பட்டதைப் பொதுமக்கள் கண்டுபிடித்தனர்.

இவரை வீதியால் சென்றோர் தாக்கி ஊர்வலமாகக் கூட்டிச்சென்று எச்சரித்து விடுவித்தனர் என்று கூறப்படுகிறது. (இ.180)

## மிலேனியம் ஆண்டில் நெஞ்சை விட்டு நீங்கா முதலாவது ஆண்டு நினைவுகள்

WITH MUCH AND MIGHTY SORROW OF ETERNITY



கம்பர்மலை

### திருமதி சிவகாமி இராமச்சந்திரன்

(மம்மி)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 25 – 09 – 1931 | 28 – 07 – 1999 |

எங்கள் இதயத்தெய்வம் குடும்பத்தலைவி அவர்களின் ஆத்மா சாந்தியடைய நெற் கொழு ஆதி வைரவரை வேண்டி நிற்கும்:

பாசமிகு
திரு. ம. இராமச்சந்திரன்
(குடும்பத் தலைவன்) மற்றும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவகோட்டம்,
கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு.
(77250)

உதயன்

## புதிய அரசியல் நீதியா?

தாம் அவசர அவசரமாகக் கொண்டு வந்த அரசமைப்புச் சீர் திருத்தச் சட்ட நகலை, எதிர்பார்த் தது போன்று இந்த நாடாளுமன்றத் தின் பதவிக் காலத்தில் நிறைவேற்ற முடியாது என்பதனை ஜனாதிபதி சந்திரிகா உணர்ந்துவிட்டார். பொதுத்தேர்தலின் பின்னரே கொண்டு வந்து நிறைவேற்றுவதாக இப்போதைக்கு முற்றுப்புள்ளி வைத் திருக்கிறார்.

இப்போது நடைமுறையில் உள்ள அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தப்போவதாக தமது அரசாங் கம் மக்களிடம் இருந்து ஆணை பெற்றதாகவும் அதனாலேயே தாம் இந்த முயற்சியில் இறங்கியதாகவும் ஜனாதிபதி தமது அவசரத்துக்குக் காரணம் கற்பித்திருக்கிறார்.

அரசமைப்பைத் திருத்தப்போவ தாக, மிகக் குறிப்பாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கப்போவ தாக, தேர்தல் வாக்குறுதி கொடுத்து - மக்களிடம் ஆணைபெற்றே - சந் திரிகா 1994இல் பதவிக்கு வந்தார் என்பது உண்மையே!

அதேபோன்று, அதிகாரப் பரவல் திட்டத்தை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அறிமுகப்படுத்தப்போவதாக உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், இறுதி யாக கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றில் அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது- வாக்குறுதி வழங்கப்பட்டது - உண் மையே.

ஆனால் -

1995 ஜூலை 15ஆம் திகதியோடு நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு மக்கள் 1994 இல் தந்த ஆணை, இம்மாதம் மூன்றாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகலில், சந்திரிகா 2005ஆம் ஆண்டுவரை தொடர்ந்து பதவியில் இருக்க வகை செய்வதாக மாறி உள்ளது!

அதிகாரப் பரவல் குறித்து அர சாங்கம் முதல் முறையாக அரசு உத்தியோகபூர்வமாக 1995இல் வெளியிட்ட நகலில் இருந்த நல்ல அம்சங்கள் 1997 நகலில் வெட்டி நறுக்கப்பட்டு, சிதைக்கப்பட்டிருந் தன. அந்த மாற்றப்பட்ட வடிவமே னும் இம்மாதம் மூன்றாம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டநகலில் இல்லை!

மேலும் வடக்கு - கிழக்குப் பிராந் திய சபை புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததும் (ஏனைய பிராந்திய சபைகள் போன்று) உடன டியாக இயங்க வகை செய்யப்பட வில்லை. இடைக்கால நிர்வாக சபை ஒன்றுக்கே ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அதாவது (முதலா வது) வடக்கு - கிழக்குப் பிராந்திய சபையை மக்கள் தெரிவுசெய்வ தற்கு வாய்ப்பு அளிக்காமல், அதன் அங்கத்தவர்களை ஜனாதிபதியே நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

இவ்வாறு மக்களுக்குத் தெரி யாத பல விடயங்களை அரசமைப் புச் சட்டநகலில் சேர்த்துவிட்டு, எதிர்பார்த்தவற்றை நீக்கிவிட்டு, மக் கள் தந்த ஆணைப் பிரகாரமே புதிய அரசமைப்பு நகல் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்படு வது எவ்வகையில் பொருத்தம்?

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் - என்ற வரிகளே இங்கு ஞாபகத்திற்கு வருகிறது. மனதில் ஒன்றை வைத்து வெளியில் இன் னொன்றைக் காட்டிக்கொண்டு, தமது மனதில் இருந்ததற்குத் தான் மக்கள் ஒப்புதல் அளித்தார்கள் என்று சொல்வது புதிய அரசியல் நீதி யாக முகிழ்கிறதா?

மொத்தத்தில் புதிய அரசமைப் புச் சட்டத்தை நிறைவேற்ற முடியா மற்போன தோல்வியைச் சந்திரிகா நியாயப்படுத்த முனைகிறார்.

தேர்தல் நடைபெற்று முடிவுகள் தெரிந்த பின்னரே - புதிய நாடா ளுமன்றம் பதவி ஏற்ற பின்னரே - அதிலேனும் அரசமைப்புச் சீர்திருத் தத்தைக் கொண்டு வந்து நிறை வேற்ற முடியுமா என்பது தெரிய வரும். நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆசனங்க ளைப் பெறும் பட்சத்தில் இப்போதி ருந்ததைவிட நிலைமை மேலும் மோசமாகும். எனவே ஜனாதிபதியின் "ஆசை" நிறைவேறுமா என்பதற்குப் பொதுத் தேர்தலே பதில் சொல்லும்!

புதிய அரசமைப்புக்கு எதிராக இனியும்

# வீதியில் இறங்கி போராடுவோம்!

## டிரோன் பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு,ஓக.14

அரசமைப்புச் சீர்திருத்த யோச னைகள் தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் ஒத்திவைக்கப் பட்டுள்ள நிலையில் -

அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இனியும் வீதி யில் இறங்கிப் போராடப்போவதாக ஐ.தே.கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பியான டிரோன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச் சீர்திருத்த யோச னைகள் புதிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க கடந்த வெள்ளியன்று ரூபவா ஹினிக்கு வழங்கிய பேட்டியில் கூறி யிருப்பது குறித்துக் கருத்துத் தெரி விக்கையிலேயே டிரோன் பெர் ணாண்டோ இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அரசமைப்புச் சீர்திருத்த யோச னைகளை, மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெற்றுக்கொள்ளா மல் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றிவிடமுடியாது. அவ்வாறு நிறை வேற்றுவதற்கு அரசமைப்பு ஒரு போதும் இடமளிக்காது - என்றும் அவர் கூறினார்.

(ஐ-7)

## யாழ். இந்துவில் முழு நிலா நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படும் முழுநிலாநாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் க.சி. குகதாசன் தலைமை யில் இடம்பெறவுள்ள இந்த நிகழ் வில் "புலம்பெயர்ந்த நாடுகளில் நமது இளைய தலைமுறை" என்ற பொருளில் ஸ்கந்தவரோதயக் கல் லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் கருத்துரை வழங்குவார். (இ-9)

# தமிழருக்கு விளக்க மறியல்

கொழும்பு,ஓக.14

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஜா-எல பகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புத் தொடர் பான தகவல்களைப் பொலீஸாருக் குத் தெரியப்படுத்தாது மறைத்ததா கக் கூறப்படும் தமிழர் ஒருவரை திகதி குறிப்பிடாது விளக்கமறிய லில் வைக்குமாறு நீர்கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி சமன் விக்கிரமராச்சி உத்தரவிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப் பாணம் - கொடிகாமத்தைச் சேர்ந்த அம்பலவாணா ஜெயபாலன்(வயது30) என்பவரே இவ்வாறு விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளார்.

(ஐ-7-6)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.14

தூரிகை நுண்கலை வளாகத்தி னரால் நடத்தப்படும் "துணிகளில் அலங்காரம் கண்காட்சி - 2000" இன் றும் நாளையும் காலை 9மணி தொடக்கம் மாலை 5மணிவரை நெல் லியடியில் உள்ள தூரிகை வளா கத்தில் இடம்பெறவுள்ளது. (இ-9)

# விவசாய நிலங்களை பதியுமாறு கோரிக்கை

காரைநகர்,ஓக.14

காரைநகரில் உள்ள விவசாய சம்மேளனங்களால் விவசாய நிலங் களை பதிவுசெய்யும் பணி மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

காரைநகரில் நெற்செய்கையில் ஈடுபடுவோர், தங்கள் விவசாய நிலங்களின் விவரங்களை தங்கள் பகுதி விவசாய சம்மேளனத்திடம் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்ப தாக பதிவு செய்து கொள்ளுமாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (இ-73)

## மருந்து விசிறல்

புங்குடுதீவுப் பகுதியிலுள்ள மா மரங்களுக்கு மருந்தடிக்கும் நடவ டிக்கையை பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கம் மேற் கொண்டு வருகின்றது. மருந்தடிப்ப தற்கான தெளிகருவி மற்றும் மருந்து வகைகளை வேலணை சுமநல சேவை நிலையம் வழங்கியுள்ளது.

(இ-167)

## உண்ணாவிரதிகள் மயக்கம்

மட்டக்களப்பு,ஓக.14

மட்டக்களப்பில் கடந்த 9 தினங் களாக சாகும்வரையான உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த வேலையற்ற பட்டதாரிகள் ஐவரில் இருவர் நேற்றுமுன்தினம் மயக்கம டைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

செல்வநாயகம் தில்லைக்கூத் தன் (கல்லடி),கேதாரப்பிள்ளை நடே சன் (முனைக்காடு) ஆகியோரே அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேலை வழங்கக்கோரி வேலை யற்ற பட்டதாரிகள் இப்போராட் டத்தை நடத்தி வருகின்றனர்.

(ஐ-7-21)

# அராலியில் குடிதண்ணீர் விநியோக விஸ்தரிப்பு வேலை இடைநிறுத்தம்

மூளாய்,ஓக.14

அராலிப்பகுதியில் மேற்கொள் ளப்பட்ட குடிதண்ணீர் விநியோக விஸ்தரிப்பு வேலைகள் இடையில் கைவிடப்பட்டுள்ளன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவ னத்தின் உதவியுடன் இந்த குடி தண்ணீர் விநியோக விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் வேலைகள் பூர்த்திய டைய முன்னரே இந்தத்திட்டம் கை விடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அராலி மத்தி, அராலிகிழக்கு, அராலிதெற்கு, அராலிமேற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளி லேயே குடிதண்ணீர் விநியோக விஸ்தரிப்பு வேலைகளுக்கு திட்ட மிடப்பட்டிருந்தது. அத்துடன் இதற் கான ஆரம்ப வேலைகளும் மேற் கொள்ளப்பட்டிருந்தன. சிரமதான அடிப்படையில் இப்பகுதி மக்கள் தமது பங்களிப்பைச் செய்திருந்த னர். (இ-99)

## வை.எம்.சீ.ஏ வாலிபர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.14

இடம்பெயர்ந்துள்ள யாழ்ப்பா ணம் வை.எம்.சீ.ஏ. வாலிபர்களுக் கான அவசரகலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நவாலி வை.எம்.சீ.ஏ மண் டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சகல உறுப்பினர்களை யும் தவறாது கலந்து கொள்ளுமா றும், வரமுடியாதவர்கள் தமது விவ ரங்களையும் தற்போதைய முகவரி யையும் தவறாது அனுப்பி வைக் குமாறும் அருட்திரு. யூட் சுதர்ஷன் கேட்டுள்ளார். (இ-9)

### உதயவாக்கு

அடக்கத்தை உறுதிப் பொரு ளாகக் கொண்டு காக்க வேண் டும். அந்த அடக்கத்திலும் மேம்பட்ட ஆக்கம் உயிர் களுக்கு வேறு இல்லை.

- திருவள்ளுவர்

### நாளை

ஆடி 31

செவ்வாய்க்கிழமை

*திதி* பூரணை
முற்பகல் 10.51 வரை
*நட்சத்திரம்* அவிட்டம்
இரவு 2.58 வரை
*சுபநேரம்* 10.35 - 12.05
*ராகுகாலம்* 3.05 - 4.35
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

## மஞ்சத்தில் ஏறி வந்து தஞ்சமளிப்பாய் முருகா



ஓடியும் நடந்தும் வந்த
ஒரு லட்சம் தமிழர்க்கெல்லாம்
தேடி நல்உணவும் வீடும்
தந்தது தென்மராட்சி
இடியுண்டு வீடு வாசல்
இடர்பட்டலறி நிற்க
கொடியுடன் நல்லூர் தன்னில்
கொற்றவா நீ இல்லையோ சொல்!

விதியடா! கதையை விடடா!! மூடா!!!
வீண் சண்டை போடவா, வந்தாயிங்கு
மதியுண்டா! உனக்கு மடையா!! மக்கு!!!
மரகத வேலை பழித்திட யாராட நீ
கதியற்ற மக்கள் தங்கள் கதையதை சொன்னேன் அப்பா
கண்ணீரைக் கண்டால், கசியாதோ நின் தனுள்ளம்
விதிவிதி என்று வேலா விளம்புதல் முறையோ வெட்கம்
விதியது வலியதானால் வீரவேல் உனக்கேன் சொல்லு?

திரு நிறை மஞ்சமேறு தீரனே கோபிக்காதே
தீந்தமிழ் திராவிடர்கள் திக்கற்று திரிதல் கண்டு
தீராத காதலாலே தீயனேன் ஏசி விட்டேன்
தீயது கொண்டு தில்லையில் ஆடும் அண்ணல்
போரது ஓயவேண்டில் பூதலம் சிறக்க வேண்டில்
போயறை முருகனார்க்கு புகன்றிடு என பணித்தான்
ஆராத காதலாலே அடியனேனிங்கு வந்தேன்
ஐயனே எமக்கு நீ தான் ஆறுதல் அளிக்கவேண்டும்.

- *மு.திருநாவுக்கரசு*
(ஓய்வு பெற்ற நீதிபதி)

## தீவினை அகல மஞ்சத்தில் வாரீர்

செந்தமிழ்(த்) தெய்வம் என்றும்
தேவரின் குறைகள் நீக்கி,
அந்தமில் வாழ்வு தந்த
அற்புத வடிவன் என்றும்
சிந்தையிற் கொண்டு எங்கள்
தீவினை அகல வேண்டி
வந்தனம் மஞ்சத்தில் காண!
வரமருள் நல்லூர்(க்) கந்தா!

- *முருகனடியான்*

## மண்ணைக் காக்க அருள்வையோ?

கெஞ்சி எங்கள் உரிமை இங்கு கேட்டுக் குட்டு வாங்குறோம்
அஞ்சி அங்கும் இங்கும் ஓடி அகதியாகி வாடுறோம்
தஞ்சம் என்று நல்லை வந்துன் தாளைப் பிடித்து வேண்டுறோம்
மஞ்சம் ஏறி நெஞ்சில் ஆடி மண்ணைக் காக்க அருள்வையோ?

- *சித்தன்*

## அஞ்சலென மஞ்சமதில் வருகிறான்!

(திருப்புகழ் சந்தம்)

எங்களது அன்னையுந் தந்தை முன்னோர்களும்
அன்று உனைக் கண்டனர் ~ வெள்ளி வேலாய்
திங்களாடி யிருபதிற் திகழும் விக்கிரமத்தில்
உன் உருவை மாற்றினாய் ~ தங்கவேலாய்
தங்க உருவுடு நீ தண்ணருளை வீசியே
எங்களது துயரெலாம் ~ வெந்துபோக
மஞ்சமதில் வந்துநீ வெஞ்சமரை மாற்றுவாய்
நல்லையம் பதி யுறை ~ கந்தவேளே

நெஞ்சம் நிறைந்திடுந் துன்பச் சுமையுடன்
உந்தனது சந் நிதியில் ~ ஓன்றுகூடி
விஞ்சும் அவுணரின் நெஞ்சம் பிளந்தவா
தஞ்சம் உன் கழலிணை ~ என்றுபாடி
வஞ்சம் நிறைந்திடும் நஞ்சை நிகர்த்தவில்
வெம் பகையை மாற்றுவாய் ~ என்றுவேண்ட
அஞ்சலென நல்லையில் மஞ்சமதில் வந்திடும்
குஞ்சரி கணோ டுறை ~ கந்தவேளே

- *கவிமணி அன்னைதாசன்*

## மஞ்சத்தில் வருக

எழிலான மஞ்சத்தில் நல்லூரா வருக!
இரந்திடும் அன்பரின் நெஞ்சத்தில் தங்க
பொழிலான வீதியில் நல்லூரா வருக!
புதுவாழ்வை புவியில் தந்திங்கு காக்க
அழியாத வரமீய நல்லூரா வருக!
அவலங்கள் இம்மண்ணில் இல்லாமற் போக
பழியிங்கு சூழாமல் தமிழரைக் காக்க
பார்வதி மைந்தனே மஞ்சத்தில் வருக!

- *மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்.*

## அல்வாய், வேவிலந்தை

# அருள்மிகு முத்துமாரி அம்மன் ரதோற்சவ சிறப்புமலர்

## 14-08-2000

# இருநூறு ஆண்டுகள் பழைமைவாய்ந்த முத்துமாரியம்மனின் ஆலய வரலாறு!

சைவநெறி தழைத்தோங்கவும் மானிடம் உலக வாழ்வூடாக ஆன்மீக நெறியிற் சென்று இறை திருவடிப் பேறு பெற்று பேரின்பம் பெறவும் நம் முன்னோர் ஊர்கள் தோறும் சிவாலயங்கள் அமைத்து வழிபட்டு உய்ந்தனர். உலகெலாம் உணர்ந்தோதற்கரியவனாகிய இறைவனை எளியவனாக்கி திருக்கோவில்களில் எழுந் தருளச் செய்தனர். தனிமனித மனங்களில் கருக்கொண்ட கோயிலின் தோற்றம் பலபேர் பங்களிப்பினால் நிலையான கோயில்களாயின.

தமிழ் அரசர்களாக விளங்கிய பலர் திராவிட சிற்பக்கலையின் உயிர்த்துடிப்பைக் கற்களில் வடிப்பித்துப் பிரமாண்டமான கோயில்களை எடுப்பித்தமையை வரலாற்றுப் பதிவுகள் காட்டுகின்றன.

'குடியிருக்கும் இடமெல்லாம் கோயில்' கண்டவர்கள் தமிழர்கள். அவ்வாறு கட்டப்பட்டு இன்று பிரசித்தி பெற்று விளங்குவதுதான் அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயம்.

### ஊர்

அலை மருவி விளையாடும் 'அலைவாய்' என்ற பெயர்தான் அல்வாய் எனத் திரிபுபெற்றதோ? அன்றி அந்நாளில் ஆலவாய் எனப்படும் மதுரையுடன் தொடர்புகொண்டிருந்தமையால் ஆலவாய் மருவி அல்வாய் ஆனதோ? எப்படி இருப்பினும் இன்று அல்வாய்தான் அம்பிகை வீற்றிருக்கும் ஊர். 'வேவிலந்தை' என்பது திருத்தலம் அமைந்துள்ள நிலத்தின் பெயர். இந்தப் பெயரும் கூட வேம்பூ+இலந்தை, அல்லது வேல்+இலந்தை என்கின்ற அந்நிலத்து மரங்களின் பெயர் தாங்கியதாய் இருக்கக் கூடும்.

### சக்தி

பஞ்ச கிருத்தியங்களின்போது சிவசக்திகளாய்த் தோற்றமளிக்கும் ஆதி சக்தியான உமை பல்வேறு வடிவங்களில் மக்களால் வணங்கப்படுகின்றாள். மதுரையம்பதியிலிருந்து திருஉருவம் எடுத்துவரப்பட்டபோது நாட்டில் சின்னம்மை - பெரியம்மை நோய்கள் பரவின. அம்மனின் திருவிளையாட்டுத்தான் இவை என்று நம்பிக்கை கொண்டவர்கள் அம்பிகை அருள்மாரி பொழிந்து காப்பாள் என்பதால் முத்துமாரி அம்மன் எனத் திருநாமம் புனைந்தனர் போலும். எனவேதான் இன்று அலவாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் எனப் பேசப்படுகின்றாள் எங்கள் அன்னை.

### தல வரலாறு

தமிழீழத் தேசத்தில் வன்னிய மன்னர் அரசாண்டபோது அல்வாய் என்ற எமது கிராமத்தில் சில நில உடைமையாளர்கள் வல்லமை பெற்றிருந்திருக்கிறார்கள்.

மழவராயன், மாப்பாணன், மணிவீரன் போன்றோர் சிலர். இந்த மரபிலே வீரமாப்பாணர் என்பவர் தோன்றினார். குமாரவேலர் அவரது மகன். 'உடைச்சி' என்று எல்லோராலும் அழைக்கப்பெற்ற வள்ளிநாச்சி அவரது தங்கை. இளவயதிலேயே விதவையாகியவர். உடைச்சியின் காலத்தில் அக்கம்மா என்கிற பெண் தெய்வத்தின் மாயங்கள் குறித்து ஊர் முழுவதும் ஒரே பேச்சு. ஊரில் கிழக்கே மண் கொழுத்த வளமான தாழ்ந்த பிரதேசம். ஐந்நூறு ஏக்கர் வரை இருக்கும். மாரி காலத்தில் வெள்ளம் கடல்போலக் காட்சிதரும் ஒரு குளம், ஒரு கிணறு, ஒரு குகை. அப்பகுதியில் இன்று இருப்பது நாச்சிமார் கோயில். இந்நிலப்பகுதி (மாய + கை) (மாய + அக்கை) 'மாயாக்கை' என அழைக்கப்படுகிறது. உடம்பே தெரியாது ஒரு கை மட்டும் நீட்டியபடி ஒரு பெண் தெய்வம் பலி கேட்பதாக ஊரார் பேசிக் கொள்வர். பஞ்ச கன்னியரைப் பலியிட்டால் அம்மாயக்கை வெள்ளிக் கிடாரத்தில் நிறையப் பொன் கொடுப்பாளாம்.

உடைச்சிக்கு மாயஅக்கை மேல் பயபக்தி. நாச்சிமாரை அடிக்கடி வழிபடப்போவார். காத்தவராயன் கதையும் உடைச்சியை சக்தி வழிபாட்டுக்காரியாக மாற்றியிருந்தது. வசதி படைத்த குடும்பத்து விதவையாதலால் ஆண்டாண்டு மதுரைக்கு மீனாட்சி தரிசனத்துக்காக தோணியில் போய்வருவார்.

ஒருதடவை மதுரைக் கடை வீதியில் அழகார்ந்த அம்மன் வெங்கலத் திருவுருவில் வயப்பட்டு அதனை வாங்கி பயபக்தியுடன் ஊருக்கு எடுத்துவந்தார். தாம் வாழ்ந்து வந்த நாற்சாரம் வீட்டில் புனிதமான ஒரு திண்ணையில் திருவுருவை வைத்து நாளும் அலங்கரித்து திருவிளக்கேற்றி வழிபட்டு வந்தார்.

காலதேவன் அவரது கணக்கைப் பார்ப்பதற்கு இடையில் தான் ஆதரித்து வந்த அம்மனை தன் பின் யார்தான் ஆதரிக்கப் போகிறார்கள்? என்ற கவலை உடைச்சியை ஆட்கொண்டது. கண் உறங்காத போதெல்லாம் திருவுருவச் சிந்தனை தான்.

### தாபனம்

ஒருநாள் 'அம்மாளே' என்று பெருமூச்சு விட்டபடி கண்ணுறங்கிவிட்டாள் உடைச்சி.

"வள்ளி! கவலைப்படாதே உங்கடை அந்தக்காணி, வேம்பும் இலந்தையும் நிக்கிற காணியிலே அந்த மரத்தின் கீழே என்னைக் கொண்டு போய் வை. நாளும் பொழுது சரிந்தபின் விளக்கேற்றிவா. மற்றதெல்லாம் நான் பார்க்கிறேன்"

திடீரெனக் கண் விழித்தாள் உடைச்சி. கனவுரைத்த அந்த அழகான கிழவியைக் காணவில்லை. கனவு ஊர் எல்லாம் பரவி ஊரே திரண்டு உடைச்சி வீட்டை நிறைத்தது.

வேவிலந்தைக் காணியில் கொட்டிலிட்டு அம்மன் விக்கிரகத்தை தாபனம் பண்ணுவதாக முடிவு பண்ணினார்கள். அதன்படி முத்துமாரி அம்மன் என்ற திருநாமத்துடன் வேவிலந்தைப் பதியில் அன்னை கொலுவிருக்கலானாள்.

இந்நிகழ்வு கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகட்கு முற்பட்டது. அதாவது ஐந்து தலைமுறைக்கு முன் நடந்தது. இவை தலைமுறை தலைமுறையாகக் கூறப்பட்டுவரும் செய்தியாயினும். காணிப்பதிவுகளாலும் முடிக்கப்பெற்ற உறுதிகளாலும் நீதிமன்றப் பதிவுகளாலும் உண்மையானது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

### நிர்வாக வரலாறு

மேற்குறிப்பிடப் பெற்ற குமாரவேலர் சந்ததியினர்தான் கோயில் தாபகர்களாயிருந்த போதிலும் வேவிலந்தைக் காணி உரிமையாளராய் இருந்த தோம்பாளர்கள் அறுவரது வம்ச பரம்பரையும் உரிமையுடையவர்கள் என்ற காரணத்தாலேயே நாற்பதுபேர் கொண்ட மகா சபையிடம் நிர்வாகம் விடப்பட்டதென்பது 123/124/1876 நொத்தாரிசு ஆர்.ஆறுமுகம் முகதாவில் முடிக்கப்பெற்ற அதிகார பத்திரமூலம் அறியக் கிடக்கிறது.

இற்றைக்கு ஏறத்தாழ நூற்றிருபது ஆண்டுகட்டு முன்பே தனியுரிமையைப் பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுத்துப் பொதுக் கோயிலாக்கிய பெருமக்களை நாம் நினைவுகூர்தல் வேண்டும். அந்நன்றிக்குப் பிரதியாக பரிபாலன சபையின் செயலாளராக குமாரவேலர் குடும்பத்து உதித்த நமசிவாயம் வேலுப்பிள்ளை என்பவரை உறுதிப் பத்திர மூலம் மகா சபை நியமனம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

1929ஆம ஆண்டுவரை உடைச்சி வம்சத்தில் உதித்தவர்கள் மணியகாரராக இருந்துள்ளனர்.

### தீர்ப்பு



இவ்வருடம் கட்டுத்தேர்
அடுத்தவருடம் சித்திரத்தேர்

கோயில் திருப்பணி வேலைகள் தொடங்க வேண்டும். அம்மன் ஆலயம் எழுச்சி பெறவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட பெரியோர்கள் சிலர் நீதிமன்றத்தை நாடினர். அல்வை வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் பகிரங்க நம்பிக்கைச் சொத்தாக்கப்படவேண்டும் என்பது அவர்கள் கோரிக்கை. இதில் முன்னின்று உழைத்தவர்களில் ஆறுமுக உபாத்தியாயர் குறிப்பிடத்தக்கவர். இவர்தான் 1930ஆம் ஆண்டிலிருந்து 1948ஆம் ஆண்டு வரை மணியகாரனாக இருந்தவர்.

ரி.ஆர்.44 இலக்க வழக்கின் தீர்ப்புப் பிரகாரம் அம்பாள் ஆலயம் பகிரங்க நம்பிக்கைச் சொத்தாகியது. இற்றைக்கு அறுபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னரே வடமராட்சியில் பொதுக் கோயில் என்ற பெருமையை இவ்வாலயமே பெற்றிருந்தது என்பது மிகையான கூற்றன்று.

ரி.ஆர்.457 இலக்க வழக்கின் மூலம் மீளவும் பொதுச் சொத்து என நீதிமன்றம் பதிவு செய்தது.

நிர்வாகம் சம்பந்தமாக கடைசியாக நடந்த ரி.ஆர்.100ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின்படி ஆலயம் நீதிமன்றினால் யாத்தளிக்கப்பட்ட யாப்பின் பிரகாரம் ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை பரிபாலனசபை தெரிவு செய்யப்பட்டு தற்போதைய நிர்வாகம் நடைபெற்றுவருகின்றது.

கடந்த கால நிர்வாகங்களில் நடந்தேறிய திருப்பணிகள் சார்பாக மேலும் பெரியோர் கோ.கதிரேசு, க. இராமலிங்கம், சி.பாலசிங்கம், தம்பு தங்கராசா போன்ற பெருமக்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இப்போதைய பரிபாலன சபையும் முன்னவர்களுக்குத் தாம் பணிபுரிவதில் சளைத்தவர்களல்லர் என்பதை பல லட்சங்கள் சேர்த்து புனருத்தாரணம் செய்தமையும் பிரமாண்டமான முறையில் மகா கும்பாபிஷேகம் செய்தமையும் மேலும் பல லட்சம் செலவில் அன்னதானமடம் ஒன்றையும் கட்டி முடித்தமையும் பற்றிப் பாராட்டப்பட வேண்டியவர்களே.

ஆண்டின் அரைவாசிக்காலம் விழாக்கள், அபிஷேகங்கள், பூசைகள், திருநாட்கள் என சிறப்பு நிகழ்வுகள் பல நடைபெறுகின்றன.

அம்மையின் அருள் வேண்டி அனைத்து மக்களும் சிறப்பாக பெண்கள் சாரைசாரையாக ஆலயம் நாடி வருவதும் பக்தகோடிகள் கரகம், காவடி, பால்செம்பு, கற்பூரச் சட்டி தாக்கி ஆடுவதும் கண்கொள்ளாக் காட்சியே.

சிறப்பாக நேர்த்தி வைத்து நீர்க் கஞ்சி வார்க்கும் நிகழ்வு அல்வை முத்துமாரியம்மனுக்கே உரித்தானதாகும்.

வடமாராட்சிப் பகுதியில் சனரஞ்சகமான செல்வச்சந்நிதி, வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில்களுக்கு அடுத்து எம் அன்னையின் ஆலயம் அனைத்து மக்களும் மனநிறைவுடன் வழிபட்டுய்யும் திருத்தலமாக எழுச்சிபெற்று வருகிறது. ★

---

# தேடி வருகிறாள் தேரேறி தெய்வத் தாய் முத்துமாரி!

உற்சவம் என்பது உத்தமயாகம் எனவும், மேலான பஞ்ச கிருத்தியம் எனவும், போக மோட்சங்களைக்கொடுப்பது எனவும் பொருள்படும். இது நித்திய, மாத, வருட உற்சவம் என மூவகைப்படும்.

வருடோற்சவத்தை மஹோற்சவம் என்றும் அழைப்பர்.(மகா + உற்சவம்).

தீர்த்த உற்சவத்தின் முதன்நாள் நடைபெறுவது இரதோற்சவம். இதனைத் தேர்த்திருவிழா என்றம் கூறுவர். தேர் என்பதற்கும் இரதம் என்பதற்கும் சிறிது வேறுபாடுண்டு. திருவாரூர்த் தேர் - பழனி இரதம் என்பன நோக்கற் பாலது. வள்ளுவரும் 'உருள் பெருந் தேர்க்கு' என்றார்.

அருணகிரி "முப்புரம் எரி செய்த அச்சிவனுறை ரதம்" என்றார். இன்று இவை இரண்டு சொற்களும் ஒன்றாகவே பயன்படுகின்றன.

### முக்கியமானது தேர்த்திருவிழா

இந்து சமயம் கருத்தாழம் கொண்ட, காலங் கடந்த, பலரால் கட்டி வளர்க்கப்பட்ட மதம். அதிலுள்ள கருத்துக்கள் தத்துவ அர்த்தமுள்ளனவாகக் கருதப்படுகின்றன. ஆலயக் கிரியைகளும் அவ்வண்ணமே. கண்ணுக்கும் கருத்திற்கும் இன்பந்தரும் விழாக்களை நம்முன்னோர் நடத்தி வந்தனர். "உளர் உணர் கொண்ட சீர் கெழு விழா" என்பது திருமுருகாற்றுப்படை.

ஆலயத்தில் நடைபெறும் விழாக்களில் மிக முக்கியமானது தேர்த் திருவிழா என்பது தத்துவஞானிகள் பலரின் கருத்தாகும்.

உடல் நலக்குறைவாலும், ஆசௌச முதலிய இடராலும், கோயிலுள் சென்று வழிபட முடியாத அன்பர்களின் இடர் தீர்ப்பதற்காக, மாச்சார சம்பந்தமான முறையில் அகிலாண்ட கோடி ஆன்மாக்களின் அன்னை முத்துமாரி கோயிலின் வெளியே வந்து வீதியெங்கும் அருள் மழை பொழியத் தேர்மீது பவனிவரும் இந்நாள், பொன்னாள்.

"கண்ணினாற் தேர்ப் பொலிவு காண்டலே கண் பெற்ற இன்பம்" என்றார் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்.

### அரசரும் தெய்வமும் ஏறும் தேர்கள்

அரசரும், தெய்வமுமே தேர் ஏறும் தகைமை பெற்றிருந்தனர். மன்னன் தெய்வமாக மதிக்கப்பட்டான். "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்" என்பது இன்றல்ல அன்று இருந்தது. இன்று தெய்வங்களுக்கே அது தனி உரிமையாயிற்று. அரசரும், தெய்வங்களும் போருக்காகவும், பவனிக்காகவும் தேரிற் சென்றதைப் புராண இதிகாசங்களில் பரக்கக் காணலாம்.

ஆகம விதிப்படி சுவாமி தேரேறி வந்து அருள் பாலிக்கவேண்டும் என்பது நியதி.

ஐந்தொழிலுள் முத்தொழில் அடங்கும். மூன்றாவதானது அழித்தல். இரதோற்சவம் அழித்தற் தொழிலைக் குறிக்கும்.

முன்னொருக்கால் சிவன், திரிபுர அரசர்களது கோட்டையைத் தேரேறிச் சென்று அழித்ததாக வரலாறுண்டு. அத்தேரின் பண்பைச் சிறிது நோக்குவோம். மந்தரமலையே அதன் அச்சு; சூரிய சந்திரரே சில்லு; நால் வேதங்களே தேரை இழுக்கும் குதிரை; பிரமா அதன் சாரதி. இவ்வாறு பலவாகக் கற்பனை செய்யப்பட்டன. இரதம் சுவாலித்து எரியும் அக்கினி போலவும் தாமரை மொட்டுப் போலவும் அடிப்பாகம் ஒடுங்கியும் நடுப்பாகம் அகன்றும் மேற்பாகம் குறுகியும் காணப்படும்.

மூன்று அசுரர்கள் என்பது நம்மைப் பந்தித்துள்ள மும்மலங்கள். ஆன்மாக்களாகிய எம்மவர்களின் மலவாதனையை அழிப்பதையே தேர்த்திருவிழா உணர்த்துகின்றது. இன்று தேர் பவனிவரும் அன்னை முத்துமாரி தீமைகளை அழிக்கின்றாள். நல்லவர்களாக ஆக்குகின்றாள். ஆனால், அவள் ஆன்மாக்களை அழிக்கமாட்டாள். "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி" அழிப்பாளா? இல்லை கருவுற்ற தாய்மார்கள் தேர் பார்த்தால் கரு அழிந்துவிடும் என்பர். இது ஐதிகம். அன்னை தீமையை அழித்து நன்மையைச் செய்வாள்.

*அப்'ணி செஞ்சடை ஆதிபுரா*
*தனன்*
*முப்புரம் செற்றவன் என்பர் மூடர்*
*கள்*
*முப்புர மாவது மும்மலக் காரி*
*யம்*
*அப்புரம் எய்தமை யாரறி வாரோ*

என்று திருமந்திரம் கூறுகின்றது.

### வாழ்க்கைத் தத்துவத்தைக் காட்டும் ரதம்

இரதோற்சவம் நம் சீர வாழ்க்கைத் தத்துவத்தைக் காட்டுகின்றது. இதை நம்மில் பலர் அறியார். தெய்வத்தைத் தேரில் வைத்துப் பலர் வடம்பிடித்து இழுப்பர். தேருக்கு வடம்பிடித்து அம்பிகை பாதாரவிந்தத்தில் நிரந்தர இடம்பிடிக்க என்று யாவரும் ஒருமனதுடன் இழுப்பர். இழுக்கும் போது சரியான வழியில் தேரை நெறிப்படுத்துவதற்காக இடையிடையே சறுக்குக் கட்டையை உபயோகிப்பர். நமது வாழ்வு என்னும் தேர் சரியான முறையில் ஓடுவதற்கு இறைபிரார்த்தனை என்ற சறுக்குக் கட்டையைப் பயன்படுத்தாவிடின் வாழ்வு எங்கோ போய்விடும். தேரின் மேலுள்ள குடை நம்வாழ்வுக்கு நல்ல நிழலைத் தருகின்றது என்பதே கருத்து. அம்பிகைக்குக் குடை தேவையும் இல்லை - குடைபிடிப்பவரும் இல்லை.

அம்பிகை இரதத்துக்கு வரும்போது உக்கிரமான தோற்றத்துடன் செந்நிறப்பட்டுடுத்து செந்நிறமான மாலை அணிந்து வருகின்றாள்.

வாசலில் வரும்வேளை வெற்றித் திலகமிடப்படுகிறது. வீதிவலம் வந்து தேர் நின்றதான இருப்பிடம் தாண்டாது - அதில்தான் சாத்துவ குணத்தான பச்சை நிறப்பட்டாடை உடுத்தி, பச்சை மாலை அணிந்து, பச்சைக் குங்குமம் இட்டு அகோர குணம் நீங்கிக் குளிர்மையான சாத்வீக குணத்தோடு அம்பிகை தேரினின்றும் இறங்கி வரும் காட்சியோ, காட்சி. அழித்தற் தொழிலைச் செய்த பிரமசக்தி தோஷம் நீங்குவதற்காக அபிடேகம் செய்து பிராயச்சித்தம் முடிய அம்பிகை ஆலயத்துள் செல்கின்றாள்.

கடோபநிடதத்தில், நமது சரீரம் இரதமாகிறது. சரீரத்திலிருக்கும் ஆன்மா ரதி ஆகின்றது. அதை ஓட்

(7ஆம் பக்கம் பார்க்க)

# பழம்பெரும் நகராம் நல்லூரை புனித நகரம் ஆக்க முனைவோம்

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டுவரை ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணம் "ஆரியச் சக்கரவர்த்திகள்" என விருது தாங்கிய தமிழ் மன்னரால் ஆளப்பட்டு வந்தது. முதலிற் சிங்கை நகரும் அதன் பின்னர் நல்லூரும் (பறங்கியர் ஆதிக்கம் பெறும்வரை) யாழ்ப்பாண அரசின் தலைநகர்களாய் நிலவின. இன்று சங்கிலித் தோப்பு என அழைக்கப்படும் (முத்திரைச் சந்தைக்கு கிழக்கே உள்ள) நிலப்பகுதியே யாழ்ப்பாணத் தமிழ் அரசர்கள் பிரதானிகளின் மாளிகைகள் அமைந்த இடமாகும். இங்கு வரலாற்றுப் புகழ்மிக்க தொல்பொருட் சின்னங்கள் பல உள்ளன என்றும் அவற்றை ஆராய்வதும் பேணுவதும் இன்றியமையாதன என்றும் தீர்மானித்து இந்தப் பணிகளுக்கென ஒரு குழு அண்மையிலேயே நல்லூர்ப் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தலைமையிலேயே நிறுவப்பட்டுள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்கது. இதனோடு நல்லூர் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ள பிரதேசம் புனித நகரம் எனப் பிரகடனப்படுத்தப்படுவதற்கான முயற்சிகளையும் தமிழ், சைவ ஆர்வலர்கள் மேற்கொள்ள வேண்டும். இதற்கான காரணங்களைச் சிறிது நோக்குவோம்.

### கோயிலும் சூழலும்

இன்று கிறிஸ்தவ தேவாலயம் அமைந்துள்ள பகுதியிலே ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகுவால் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் நிறுவப்பட்டிருந்தது என யாழ்ப்பாண வரலாறு உரைக்கிறது. இதன் கிழக்கிலே வெயில் உகந்த பிள்ளையார், வடக்கிலே சட்டநாதர் சிவன், தெற்கிலே கைலாயநாதர், மேற்கிலே வீரமாகாளி அம்மன் ஆகிய கடவுளர் காவல் தெய்வங்களாக எழுந்தருளிய கோயில்கள் இன்றும் உள்ளன. இவை நல்லூருக்குப் புனிதமும் பக்திமையும் வழங்கி வருவதனை யாவரும் அறிவர். எனவே இந்தப் பிரதேசமாவது புனித நகரமாக உருப்பெறுதல் சாலப்பொருத்தமே.

"உள்ள பொருள் ஒன்றே. ஞானிகள் அதனைப் பல பெயர்களால் அழைப்பர்" என்பது வேதவாக்கு. சட்டநாதர் என்றும், விநாயகர் என்றும், கைலாசநாதர் என்றும், வீரமாகாளி என்றும், முருகன் என்றும் நாம் பல பெயர்கள் கொண்டு அழைப்பினும் பரம்பொருள் ஒன்றே



என்பதை நாம் அறிவோம். எனினும் கலியுக வரதனாயும், தமிழர்தம் பழம்பெரும் கடவுளாயும் தூய பேரழகின் உறைவிடமாகவும் நல்லூரால் மட்டுமன்றி இலங்கைவாழ் தமிழ்ச்சைவர் அனைவராலும் ஏன் பிற இன மதத்தவராலும் வழிபடப்பட்டுவரும் பெருமைக்கும் நல்லூர்க்கந்தன் உரித்தானவனாய் உள்ளான்.

தமிழகத்திலும் முருகன் பண்டு தொட்டு இன்றுவரை தமிழர்தம் தனிப்பெரும் கடவுளாக வழிபட்டு வருதலை நாம் மறந்துவிடவில்லை. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்ச்சோலை, குன்று தோறாடல் (திருத்தணி, கதிரமலை முதலியன) ஆகிய ஆறுபடை வீடுகள் அண்மையில் புகழ் ஈட்டிவரும் வடபழனி (சென்னை) முதலாம் முருகன் கோயில்களில் அடியார்கள் எந்நாளும் நிரம்பி வழிவதும், அங்கெல்லாம் நித்திய நைமித்திய பூசைகள் மிகச் சிறப்பாக நடப்பதும் மறுக்கொணாதவை. அவற்றின் அமைப்பும், வளமும், வருவாயும் பிரமிப்பை அளிப்பன. எனினும் இவற்றுக்கெல்லாம் இல்லாத தனிச் சிறப்புக்கள் சில நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு உண்டு. அவை பின்வருமாறு:-

1) கோயிலின் மிகச் சிறந்த நிர்வாகம் பிற ஆலயங்களுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குதல்.

2) நேரம் தவறாதும் பூசைக் கிரமம் தவறாதும் பூசைகள் நிகழுதல்.

3) எக்காலத்திலும் ஒரே எண்ணிக்கையில் அர்ச்சனை, அபிடேக திருவிழாக் கட்டணங்கள் வசூலிக்கப்படுதல்.

4) திட்டமிட்டு ஆண்டுதோறும் கலையுணர்வோடு ஆலயக் கட்டடங்கள், மண்டபங்கள் என்பன திருத்தியும் புதுக்கியும் கட்டப்பட்டு அவை அடியார்களின் உள்ளங்களை ஈர்த்திடும் வனப்புடைத்தாதல்.

5) உன்னதமான சாத்துப்படிகள் மூலம் முருகனது விக்கிரகங்கள், முருகனின் என்றும் குறையாத் தெய்வீகப் பேரழகாக ஏற்படுத்தி அடியாரைப் பக்திபரவசராக்குதல்.

6) கூழங்கைத் தம்பிரான் (கி.பி. 18ஆம் நூற்றாண்டு), யோகர் சுவாமிகள், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் தொட்டுக் கவிஞர் பல்லாயிரவர் இன்றுவரை தமது பாமாலைகள் கொண்டு முருகப் பெருமானை அணி செய்துவரல். (அருணகிரியாரின் யாழ்ப்பாணத் தாயன் பட்டினம் எனக்குறிப்பிட்டுப் பாடப்பெற்ற திருப்புகழ் நல்லூர் கந்தசுவாமி மேலதே என்பர்.

(7) நல்லூர்த் தேரடியிலே தமது சித்துக்களையும் ஆன்மாநுபவங்களையும் செல்லப்பாச் சுவாமிகளும் யோகர்சுவாமிகளும் வெளிப்படுத்தியமை.

(8) கோயிலின் சூழலில் நல்லூர்ச்சிவன், விநாயகர், மனோன்மணி அம்மன் ஆலயங்கள், நல்லைத் திருஞான சம்பந்தர் மடாதீனம், சடையம்மாமடம் முதலாம் திருமடங்கள் அமைந்திருத்தல்.

(9) யாழ்ப்பாண மாநகரசபை, பல்வேறு தொண்டர் குழுக்கள் என்பன விசேட காலங்களில் ஆலயத்தின் சுற்றாடல், ஒழுங்கு கட்டுப்பாடு என்பவற்றைப் பேணும் முயற்சிகளைத் திரிகரண சுத்தியோடு மேற்கொண்டுவருதல் (யாழ். மாநகர சபையின் சைவ சமயவிவகாரக்குழு ஆண்டுதோறும் 'நல்லைக்குமரன்' மலர் வெளியிடுகின்றது).

(10) வேறெங்கும் இல்லாத அளவு பக்தர் கூட்டம் திரண்டு வந்து வழிபாடுகள், நேர்த்திக்கடன்கள், பஜனைகள், அங்கப்பிரதட்சணம், அடிஅளித்தல், காவடி எடுத்தல் ஆகியவற்றிலே பக்திபூர்வமாக ஈடுபடுதல்.

(11) புறக்கவர்ச்சிகள் எவற்றையும் (கோயில் நித்திய, நைமித்திய பூசைகளைப் பொறுத்தவரை) நாடாது அடக்கமும், ஒழுங்கும் நிறைந்தமுறையில் கோயிற் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

(12) பிரதேச தேசியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி முதலாம் மக்கள் தொடர்புசாதனங்கள் கோயில் திருவிழாவுக்கு அளிக்கும் முதன்மை.

### சூழலைப் புனிதம் செய்தல்

நல்லூர்க் கோயிலின் அறங்காவலர்கள், சிறப்பாக இன்றுள்ள அறங்காவலர், பெருகிவரும் அடியார்கூட்டம் வசதியாக வழிபடுவதற்கென்று காலந்தோறும் கோயிலை, அதன் கட்டடங்களை, வீதிகளை விசாலம் செய்வதில் ஈடுபட்டு வருவது பெரிதும் பாராட்டத்தக்கதே. முன்பு ஆறுமுகசுவாமி சந்நிதிக்கு முன்னால் இருந்த பருத்தித்துறை வீதி, சில ஆண்டுகளுக்கு முன்பு அடைக்கப்பட்டு, மேற்கு வெளிவீதி இன்று பருத்தித்துறை வீதியாக மாறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதே. வசந்த மண்டபம் இவ்வீதியின் எல்லை வரை விசாலிக்கப்பட்டதால் வசந்த மண்டபப் பூசையினை முன்னரிலும் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் தரிசிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதும் மறக்க எண்ணாததாகும்.

**சொக்கன்**

ஆயினும் பெருகிவரும் மக்கள் தொகையைச் சமாளிக்க மேலும் விசாலிப்பது அவசிய அவசர தேவை என்பதையும் மறுத்ததற்கில்லை.

மாற்று ஏற்பாடுகள் மூலம் கோயில் வெளி வீதியைச் சூழ்ந்துள்ள வதிவிடங்களை இடம்மாற்றி, மேலும் அவ்வீதியை விசாலம் செய்து, சிதம்பரம், மதுரை ஆலயங்கள் போல, பிரமாண்டமான கோபுரங்களை நான்கு வீதிகளிலும் அமைத்துக் கோயிலைப் புற ஆரவாரங்களினின்று தவிர்ப்பது பற்றிச் சிந்திப்பது நன்று.

ஆலய வளாகத்துள் நுழைந்த பின் பிறவிடயங்களிலே மனத்தைச் செலுத்தாது ஒருமுகமாய் முருகப் பெருமானிலே லயிக்க வழிசெய்தல் எவ்வாற்றானும் வரவேற்கத்தக்கதே.

இவ்வகையில் யாழ். குடாநாட்டிலே ஒரு கோயிலையாவது தமிழகத் தரத்துக்கு (விசாலம், வசதி, கலைநுட்பம்) உயர்த்துவதாகிய வேணவா என்று நிறைவேறுமோ?

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலும், சூழலுமாவது புனிதப் பகுதியாகப் பிரகடனம் செய்யப்படும் நாள் வருமா?

நல்லூர் முருகப் பெருமானின் அருள் இருப்பின் எதுதான் நிறைவேறாது?

*"நம்பினோர் கெடுவதில்லை - இது நான்குமறைத் தீர்ப்பு"*

\- பாரதி



## தண்ணளி வேந்தன் ஆனாய்

**உள்ளுவ உயர்வாய் உள்ளி உயிரென ஒழுக்கம் பேணிக்**
**கள்ளமில் வாழ்வைக் கொண்ட கைலாச நாதச் சார்ய!**
**என்னன வெனினும் கர்வம் இருத்திடா துயர்ந்து நின்றாய்**
**உள்ள நாம் வாழ்ந்தாய் என்றும் உள்ளவே பிரிந்தாய்ஐயா.**

**குருமணி சீத்தாராம சாஸ்திரிக் குகந்த சீடன்**
**அருமறை ஆகமாதி பலவலன் ஆழ்ந்த செம்மல்**
**கருந்தனக் கல்கி ஞானம் கரவிலாதளித்த மேலோன்**
**குருவெனப் பலரும் போற்றிக் கும்பிடும் குணத்தின் குன்று**

**நீண்டுயர் மரபைப் போற்றும் நீர்மையைக் குடுமி காட்டும்**
**மாண்பொடு நிறைவுள்ளத்தை மலர்ந்திடு முகமும் காட்டும்**
**வேண்டிடும் தேவி அன்பின் விருத்தியைத் திலகம் காட்டும்**
**வாண்மையை, கல்விச் சீரை வழங்கிடும் முறைகள் காட்டும்**

**வாக்கிலே இனிமை அன்பு வாழ்க்கையில் எளிமைப் பாங்கு**
**நோக்கிலே கனிவு என்றும் நேர்மையே நெஞ்சில் நீதி**
**தேக்கிய தெய்வச் சிந்தை, தேவியின் திருவார் கோலம்**
**நாக்கிலே அவளின் நாமம் ஆயிரம் நவந்தேல் பாகு.**

**தன்னலம் சிறிதும் இல்லாத் தண்ணளி வேந்தன் ஆனாய்**
**பன்னலம் நல்கும் கல்கிப் பாகினைப் பலர்க்கும் ஈந்தாய்**
**என்னையும் ஒருவன் ஆக ஏற்று நல் ஏற்றம் தந்தாய்**
**உன்பெயர்கை லாசநாதன்: உன்புகழ் எவரெஸ் உச்சி.**

**- சிற்பி -**

## தேடி வருகின்றாள்.....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் சாரதி புத்தி ஆகின்றது. புத்தி பீடித்திருப்பது மனம். இந்த இரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகள் பஞ்சேந்திரியம்,சரீரம், இந்திரியம், மனம் இவற்றோடு கூடிய ஆன்மாவையே 'போக்தா' என்பர் ஞானியர். இரதோற்சவ தத்துவத்தை உணராதார் பரிகாசம் செய்வர்.

### கலைப் பெட்டகம்

தேர் ஒரு கலைப் பெட்டகம். தேர் பலவகைப்படும். போருக்கான மூன்று சில்லுத் தேர், பயணிக்கான நாலு - ஆறு சில்லுத்தேர், இழுக்கும் தேர், இழுக்காது நிலையாக நிற்கும் தேர் எனப்பலவும் உண்டு. பொதுவாக நமது ஆலயத்தே இருக்கும் தேர் கட்டுத்தேர், சித்திரத்தேர் என இரு வகைப்படும். சித்திரத்தேர் பலவிதமான அலங்காரத்துடன் கூடியது. இவ்வலங்காரம் பலவும் இறைவனின் அருட்திறனைக் காட்டுவதாக அமைவது.

இத்தகையதான அலங்காரங்கள் நிறைந்த தேரை அம்பாளுக்கு அமைக்கும் பணியில் அடியார்கள் முன்வந்துள்ளார்கள். அடுத்த வருடமளவில் முத்துமாரி அம்பிகை சித்திரத் தேரேறி எமைத் தேடி அருள் புரிய வருவாள் என எதிர்பார்க்கப்படுகிறது. அம்பிகை அருளும் அடியார் பொருளும் தான் இதற்கு விடையளிக்க வேண்டும். தஞ்சை பெரிய கோயில் கட்டிய இராஜராஜ சோழன் கூட ஒரு கிழவி கொடுத்த ஒரு சிறு கல்லைக் கூட உவந்து ஏற்றான். காரணம் சுல்லாப் பொருளும் அதில் சேரவேண்டும் என்பது தான், அடியார்கள் மனமுவந்து தரும் ஒரு சதமாயினும் அன்னையின் தேரில் சேரவேண்டும் என்பது தான் நமது விருப்பமாகும்.

கோபுரம், இரதம் இரண்டும் பிரபஞ்சத்தின் சின்னங்களாகும். இவை இரண்டிலும் பார்க்கப் பொருந்திய - பொருந்தாத உருவங்கள் அமைந்திருப்பது ஏன் என்பர் ஒரு சிலர். யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலில் சிலவற்றைக்காணலாம். இப்பிரபஞ்சம் நல்லது கெட்டது இரண்டும் சேர்ந்து அமைந்ததே என்பதைத் தேரிலுள்ள உருவங்களும் எடுத்துக் காட்டும். ஆணவம் நீங்கிப் புனிதர்களாக வடம்பிடித்து வாழ்வுயர உதவுவதே தேர்த்திருவிழா.

கலையால் சிலைவடித்து அதில் இறைவனைக் கண்டவன் ஆதியனிதன். ஆலயங்கள் கலையின் பிறப்பிடமன்றி வளர்ப்பிடமாயும் அமைகின்றன. கட்டுத்தேர்கள் - சித்திரத் தேர்களாகி மாறிவருகின்றன. அல்வாயு வேவிலந்தை முத்துமாரி அம்மனின் கட்டுத்தேர் சித்திரத் தேராகி அம்பிகை அதில் ஆரோகணித்து வரப்போகின்றாள் விரைவில் எல்லோரும் அதற்குத் தயாராவோம்.

**சாம்பவி சரணம்:**

நாயகி நான்முகி நாரா யண்கை
நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை
சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி
மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரண
மரணமக்கே.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முதலாவது
பெண் பீடாதிபதியாக பதவியேற்றுள்ள

பேராசிரியர்
செல்வி வசந்தி அரசரட்ணம்

*அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

தா. கனகசிங்கம் குடும்பத்தினர்
கோவில் குடியிருப்பு,
சாவகச்சேரி.

*ஐயனார் கலட்டி,*
*பருத்தித்துறை.*

(77272)

## பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின்
தலைவராக இருந்தவரும், ஈழமக்கள் ஜனநாயகக்
கட்சியின் யாழ். மாவட்டப் பிரதிப் பொறுப்பாளருமாகிய
தீவகம் தந்த மைந்தன்

**கௌரவ நடராசா மதனராஜா**

அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதையிட்டு எங்கள் இதயபூர்வமான பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த உயர்பதவியை வழங்கியமைக்காக

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்
நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

கௌரவ
**கே. என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாரந்தனை விவசாய சம்மேளன
நிர்வாகிகளும் உறுப்பினர்களும்.

(77267)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### உடன் தேவை

கணனியில் தமிழ் ரைப்பிங் செய்யக்கூடிய பெண்பிள்ளை உடனடியாகத் தேவை. விவரங்களுக்கு: தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும். T.P இல. 2597. (77266)

### விற்பனைக்கு

9 மாதம் நிரம்பிய கறுப்பு நிறங் கொண்ட அல்சேசன் பெண் நாய்க் குட்டியும் ஒருவயது நிரம்பிய ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: க. திலீபன், M.S லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (77259)

### படிவம்

2002 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க விசாப படிவம் விற்பனையாகின்றது. தபாலில் பெறுவதாயின் ரூபா 10 அனுப்பவும். நாயகபாலன், மானிப்பாய். (77258)

### திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ்கண், புகைப்படத் துறை சார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார்வீதி, மேல்மாடி (கன்னாதிட்டிச் சந்தி அருகில்) வெளிப்புறப் படப்பிடிப்பும் ஏற்றுக் கொள்ளப்படும். (77228)

### இசைவகுப்பு

'நியூ வீணா கானம்' இசை மன்றின் மூலம் அறிமுறைத் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்கள் உடன் சந்திக்கவும். இசை வகுப்புகளும் நடைபெறுகின்றன. செல்வி வாசுகி ரங்கன், 16/2, கச்சேரி நல்லூர் வீதி அல்லது 60, வைமன் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (77263)

### தவறிவிட்டது

17A, இராஜேஸ்வரி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுஜீவா செல்வரெட்ணம் என்பவரது தேசிய அ.அட்டை (இல.787882 684V), விசேட அ.அ. (இல.090200 6902), யாழ். பல்கலைக்கழக அ.அ (97/DG/B/31) என்பன யாழ். பல்கலைக்கழகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். பல்கலைக்கழகத்தில் அல்லது வ. செல்வரெட்ணம், வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77256)

68/18, அராலி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சிவகுமார் என்பவரது தேசிய அ. அ. (இல. 730743491V), விசேட அ.அ என்பன ஓட்டுமடம் சந்திப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77283)

## முதன்மை ஆசிரியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு குறைப்பு

முதன்மை ஆசிரியர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவு மீண்டும் 500 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

முதன்மை ஆசிரியர்களுக்கு (ஐ.எஸ்.ஏ) வழங்கப்பட்டு வந்த மேலதிகக் கொடுப்பனவு ஜனவரி மாதத்தில் இருந்து 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 1000 ரூபா வழங்கப்பட்டு வந்தது.

மேற்படி கொடுப்பனவை ஜூலை மாதத்தில் இருந்து மீண்டும் 500 ரூபாவாக வழங்குமாறும் ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வந்த அதிகரிக்கப்பட்ட 500 ரூபாவை மீளப்பெறுமாறும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளன. (இ-11)

## ஆரம்ப சுகாதார நிலையம் திறப்புவிழா

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நிதி உதவியுடன் பண்ணாகத்தில் 5 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிறுவப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

நீண்டகாலமாக தனியார் கட்டடத்தில் இயங்கிவந்த இந்த சுகாதார நிலையத்தை நிறுவவென அப்பகுதியைச் சேர்ந்த காலஞ் சென்ற குடும்பநல உத்தியோகத்தர் அமிர்தவல்லி பரமகுரு ஞாபகார்த்தமாக மூன்று பரப்புக் காணியை அவரின் மகள் ஸ்ரீதரன் பரமாநதவல்லி என்பவர் அன்பளிப்புச் செய்திருந்தார்.

இந்த சுகாதார நிலையத்துக்கான தண்ணீர் வசதியை பட்டினிக்கு எதிரான இயக்கம் வழங்கி உதவியுள்ளது. (இ-130)

## தீயினால் காயம்

தீப்பிடித்ததினால் ஒரு பெண் காயமடைந்தார். இவரைக் காப்பாற்ற முயன்ற கணவரும் தீக்காயங்களுக்கு உள்ளானார். மயிலங்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்லத்துரை குணேஸ்வரன் (வயது 31) அவரது மனைவி பவானி (வயது 31) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தரம் குறைந்த அரிசி

இம்மாதம் நிவாரணத்துக்கு விநியோகம் செய்வதற்கென வழங்கப்பட்டுள்ள அரிசி தரம் குறைவானதாக இருப்பதாக முறையிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலம் இருப்பில் இருந்தமையால் இந்த அரிசி தரம் குறைந்து காணப்படுவதாக கூட்டுறவுச்சங்க மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-86)

## ரயில் சேவைகள் ஸ்தம்பிதம்

கொழும்பில் இரு ரயில்வே ஊழியர்கள் தாக்கப்பட்டதை அடுத்து ரயில் சேவைகள் நேற்று ஆறுமணி நேரம் ஸ்தம்பிதமடைந்தன. வெள்ளி இரவு கடமையிலிருந்த இரு ஊழியர்கள் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் கொழும்பில் இருந்து அனைத்து இடங்களுக்குமான ரயில் சேவைகளும் சனியன்று திடீரென நிறுத்தப்பட்டன.

ஊழியர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களைத் தொடர்ந்து ஆறு மணித்தியாலங்களின் பின் மீண்டும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஊழியர்கள் எங்கே, எதற்காகத் தாக்கப்பட்டனர் என்ற விவரம் தெரியவரவில்லை. (ஐ-5)

## கிராமிய வங்கி இயங்குகிறது

பளை ப.நோ.கூ. சங்கத்தின் கிராமிய வங்கி, ஆனைக்கோட்டையிலுள்ள சங்கத்தில் 'தலைமை அலுவலகத்தில் இயங்கி வருகிறது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாள்களும் இயங்கி வரும் இந்த வங்கியின் அனைத்து நடவடிக்கைகளும் வழமைபோன்று இடம்பெற்று வருவதாக சங்கப்பிரதி நிதி ஒருவர் கூறினார்.

வாடிக்கையாளர்கள் மேற்குறிப்பிட்ட மூன்று நாள்களும் இந்த வங்கியில் தமது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். (இ-5)

## வங்கிகளில் கொடுப்பனவு

தென்மராட்சி,ஓக.14

பளை, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள 227 குடும்பங்களுக்கு உடனடி நிவாரணக் கொடுப்பனவான 2 ஆயிரம் ரூபா வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

மே மாதம் இருபதாம் திகதிக்கு முன்னர் இப்பிரதேசத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கே இக்கொடுப்பனவுகள் பருத்தித்துறையில் உள்ள மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கிராமிய வங்கி ஆகியவற்றின் மூலம் வழங்கப்படுவதாக பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-117)


நடைபெறுகிறது...

O/L PAPER CLASS

அனுமதிக்கு முந்துங்கள்

20 வருட மீட்டலுடன்

I.B.S

TEMPLE ROAD, JAFFNA.

(77223)



யாழ். போதனா வைத்தியசாலையில்

நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு

ஆள்சேர்ப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸினால் 18-08-2000 (வெள்ளிக்கிழமை) முதல் நோயாளர் பராமரிப்புச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தச் சேவைக்கு யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்திற்கு விண்ணப்பித்தவர்களும் 16-08-2000 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் பழைய வெளிநோயாளர் பிரிவு வாசலுக்கு அருகில் அமைந்துள்ள சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்பு காரியாலயத்திற்குச் சமுகமளிக்கவும். 'கொடுப்பனவு' விவரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மாவட்ட ஆணையாளர்,
சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ்,
யாழ். தெற்கு - பிரதேசம்.

மாவட்ட தலைமை அலுவலகம்,
புகையிரத வீதி, கொக்குவில்.
தொலைபேசி 021-3166

(77284)



உ

நல்லூர் சைவ மகா சபை

நடத்தும்

தெய்வீகத்தொடர் இசைச் சொற்பொழிவு

ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபம்
(நல்லூர் மேற்கு வீதி)

இன்று (14-08-2000) திங்கள் தொடக்கம்.
தினமும் மாலை5.00 மணிக்கு

"மகாபாரதம்"

நிகழ்த்துபவர்:
நல்லைக்குருமணியின்வாரிசு, அகளகதாவாரிதி, முத்தமிழருவி
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா

அணிசேர் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| திரு. S. பிச்சையப்பா | - | முகவீணை |
| திரு. பொ. ரமானந்தா | - | வயலின் |
| திரு. து. இராஜன் | - | மிருதங்கம் |
| திரு. ஈ. செந்தில்நாதன் | - | கெஞ்சிரா |

* அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம் *
– நல்லூர் சைவ மகா சபை.

அன்பளிப்பு:
திரு. S. தியாகராஜா (உரிமையாளர்)
சஞ்சீவி சங்கு சக்கரம் பெயின்ற் ஹவுஸ்
பரமேஸ்வராச் சந்தி - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(77282)



இணுவில்

காயத்ரீ பீடத்தில் யஜூ ருபாகர்மம்

நாளை (15-08-2000) செவ்வாய்க்கிழமை
காலை 8 மணிக்கு
பஞ்சபாத்ரம் பூணலோடு வரவும்.

சிவஸ்ரீ
தா. மகாதேவக் குருக்கள்

(77280)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதிவருட
பொருளியல் சிறப்பு B பிரிவு மாணவி
செல்வி ஞானசக்தி
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி விஜயரட்ணம் அவர்கள்

12-08-2K அன்று காலமாகிவிட்டார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பல்கலைக்கழக
கலைப்பீட இறுதிவருட
பொருளியல் சிறப்பு B பிரிவு
மாணவர்கள்.

(77281)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 14 | | 14 |
| 07 | | 08 |
| 1955 | | 1999 |

திருமதி
குணாகரன் பத்மராணி (ஆசிரியர்)
திதி 14-08-2000

ஆண்டொன்று கழிந்தாலும் உங்கள் அன்பு என்றும்
எங்களை விட்டு அகலாது தாயே!
நீ இல்லாமல் நெஞ்சம் கலங்கி நிற்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனை வேண்டுகின்றோம்.

கணவர்,
பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
62/4, நாயன்மார்கட்டு,
நல்லூர்.

(77243)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலிகள்



| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 23 | | 17 |
| 07 | | 05 |
| 1940 | | 2000 |

சபாபதி திருநாவுக்கரசு (அதிபர்)
(முன்னாள் யா/குலட்டி அ.மி.த.க. பாடசாலை,
யா/ நல்லூர் சாதனா சி.சி.ரி.எம் பாடசாலை அதிபர்)

பண்பால் உயர்ந்து
பாசத்தின் இருப்பிடமாய்
நெஞ்சினில் நிறைந்து
நினைவெல்லாம் நீங்களாக
நிதமும் எம் கண்முன் தோன்றும்
குடும்ப விளக்கே
நீர் இறைவனடி சேர்ந்து
தொண்ணூறு நாளாகும் இன்று
உங்களை அஞ்சலி செய்கின்றோம்.

இவரின் அன்பால் துயருறும்.
மனைவி, மகள், மருமகன்,
சகோதரன், பெறாமக்கள்,
மச்சாள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

4/5, மடம்வீதி,
யாழ்ப்பாணம்.

(C/12489)

# கைதாகி விடுதலையாவோர் மீண்டும் கைதாகும் நிலை

## கொழும்பு தமிழ் இளைஞர்கள் விசனம்

கொழும்பு, ஓக. 14

சந்தேகத்தின் பேரில் கைதாகி பல வருடங்கள் சிறையிலிருந்து விடுதலையாகும் தமிழ் இளைஞர்கள் கொழும்பில் மீண்டும் பொலீஸ் கெடுபிடிகளுக்குள்ளாகிக் கைது செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகப் பலரும் விசனம் தெரிவிப்பதாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இவ்வாறு விடுதலையாகி வெளியில் வரும் இளைஞர்களுக்கு ஒரு மாதத்திற்கு மேல் பொலீஸ்வதிவிடச்சான்றிதழோ அறிக்கையோ வழங்கப்படுவதில்லை. அத்துடன் கைது செய்யப்படும்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பெறப்படும் அடையாள அட்டை, கடவுச் சீட்டு என்பன விடுதலையாகி அவர்கள் வெளியே வரும்போது திரும்ப வழங்கப்படுவதில்லை என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதனால் கொழும்பில் தங்குவதற்கோ அல்லது சொந்த இடங்களுக்குச் செல்லவோ முடியாது வடபகுதி இளைஞர்கள் பலர் அவதிப்படுகின்றனர்.

ஐந்து வருடங்கள் சந்தேகத்தின் பேரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் விடுதலையான வடபகுதி இளைஞர் ஒருவர் தனக்கு ஏற்பட்ட நிலைமை பற்றி விளக்குகையில்: —

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு வந்த நான் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டேன். என் மீது எதுவித விசாரணையும் நடத்தாது 3 வருடங்கள் தடுத்து வைத்திருந்தனர். பின்பு 1998ஆம் ஆண்டு வழக்குத் தொடர்ந்தனர். என்மீது எதுவித குற்றமும் இல்லாமையால் கடந்தமாதம் விடுதலை செய்யப்பட்டேன்.

என்னைக் கைது செய்யும்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எனது அடையாள அட்டை, கடவுச்சீட்டு என்பவற்றைத் தமது பொறுப்பில் எடுத்தனர்.

விடுதலையானபோது அவற்றைக் கேட்டதற்கு அவர்கள் தரமறுத்துவிட்டனர். கொழும்பில் தங்குவதற்கு பொலீஸாரிடம் வதிவிடச் சான்றிதழ் கேட்டால் சந்தேகத்தின் பேரில் கைதாகி விடுதலையான காரணத்தைக் கூறித் தர மறுக்கின்றனர்.

பணமோ, பொலீஸ்பாஸோ இல்லாமல் கொழும்பில் தங்குவதற்கோ ஊருக்குத் திரும்பவோ முடியாமல் இருக்கின்றேன். இதே நிலையில் பல இளைஞர்கள் பரிதவிக்கின்றனர். எந்த நிலையிலும் பொலீஸார் மீண்டும் சந்தேகத்தின் பேரில் எம்மைக் கைது செய்யலாம். இப்படியான சூழ்நிலையில் இருந்து எமக்கு எப்போது விடிவு கிடைக்குமோ நாம் அறியோம்.

வெளிநாடு அனுப்புவதாகக் கூறி 3 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு முகவரும் நான் விடுதலையாகி வரும்போது தலைமறைவாகி விட்டார்.

இவ்வாறு அந்த இளைஞர் கூறியதாக அப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# தொலைக் கல்விச் சான்றிதழ் பெறாத ஆசிரியர் விவரங்கள்

## அதிபர் சங்கம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

தொலைக்கல்வி மூலமான ஆசிரியப்பயிற்சியின் இறுதிப் பரீட்சையில் சித்திபெற்று இதுவரையும் சான்றிதழ் கிடைக்கப்பெறாத ஆசிரியர்களின் விவரங்கள் வட மாகாண அதிபர்கள் சங்கத்தினால் திரட்டப்படுகின்றன.

இச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளாத மேற்படி ஆசிரியர்கள் வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும் யாழ். மத்திய கல்லூரி அதிபருமான க. இராசதுரையை அவரது அலுவலகத்தில் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் விவரங்களுடன் ஆசிரியர்கள் தம்மைச் சந்திக்க வேண்டும் என்று அதிபர்கள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பதிவு எண், சுட்டெண், முழுப்பெயர் (ஆங்கிலத்தில்), கற்பிக்கும் பாடசாலை, கற்றநெறி இலக்கத்துடன் சித்தியடைந்த பகுதி–1, பகுதி–2க்கான வருடங்கள். பயிற்சி நிலையம், இலக்கம், சிரேஷ்ட போதனாசிரியர் உறுதிப்படுத்தல் போன்ற விவரங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடம் சமர்ப்பிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியில் அலுவலக நாள்களில் காலை 9மணிக்கும் மாலை 3 மணிக்கும் இடையில் தம்மைச் சந்திக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ - 5)

# சமய சந்நிதிகளில்

குருநகர், ஓக. 14

யாழ். புனித மரியன்னை பேராலயத்தின் வருடாந்த உற்சவத்தின் நவநாள் ஆராதனைகள் தினமும் 3. 30 மணிக்கு செபமாலை வழிபாட்டுடன் நடைபெற்று வருகின்றன.

நற்கருணை விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு முதற் திருப்பலியும் 7.30 மணிக்கு விழாத்திருப்பலியும் தொடர்ந்து திருச்சுரூபப் பவனியும் இடம்பெறவுள்ளன. (க-51)

★ ★ ★

நாவாந்துறை கடற்கரை வீதியில் அமைந்துள்ள பரி.பரலோகமாதா தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் இன்று திங்கட்கிழமை நற்கருணை விழாவும் நாளை காலை 7.00 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம் பெறவுள்ளன. (க-51)

★ ★ ★

கரவெட்டி பரி. பரலோகமாதா ஆலய வருடாந்த நவநாள் உற்சவம் கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை நற்கருணைத் திருவிழாவும் நாளை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து திருச்சுரூப பவனியும் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் அருட்தந்தை எஸ். ஏ. பொன்சின் அடிகளார் மறையுரையாற்றி வருகின்றார். (க)

★ ★ ★

சில்லாலை புனித கதிரை மாதா ஆலய வருடாந்த உற்சவத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு கூட்டு திருப்பலி பூசையும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் நடைபெறவுள்ளன. (க-135)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 14

அளவெட்டி — நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

23ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தேர் வீதிவலமும் பிற்பகல் 5 மணிக்கு உறியடி உற்சவமும், 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஸ்ரீ ரங்கநாதர் இலட்சுமி பாத பூசையும் 10. 30 மணிக்கு தீர்த்த உற்சவமும், 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆஞ்சநேயர், வைரவர் அபிஷேகம், பொங்கல் என்பனவும் இடம்பெற்று பிற்பகல் 2 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும். (இ-9)

★ ★ ★

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய தீப பூசை இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம் பெறவுள்ளது. அதைத் தொடர்ந்து மாலை 5.15 மணிக்கு சுவாமி திருவீதியுலா இடம் பெறும். (இ-9)

★ ★ ★

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சங்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும்.

21 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 22 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 23 ஆம் திகதி உறியடி உற்சவமும், 24 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். உற்சவகாலங்களில் அன்னதானமும் நடைபெறும். [இ-7]

# இன்று

பௌர்ணமி தினத்தைமுன்னிட்டு சுகாதார சமூக சுற்றாடல் விவகார சபையினால் யாழ். மானிப்பாய் வீதியில் உள்ள மெடி கிளினிக்கில் இலவச நீரிழிவு, இரத்த அழுத்த பரிசோதனைகள் இன்று காலை 9 மணி தொடக்கம்நண்பகல் 12மணி வரை இடம்பெறவுள்ளன. (இ - 9 - 90)

★ ★ ★

மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்க பாலர் பூங்கா விளையாட்டுப்போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல்2.30 மணிக்கு நிலையத்தலைவர் ச. சிவகுமரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகம் பிரதம விருந்தினராகவும் மானிப்பாய் சட்டத்தரணி இரா. வசந்தசேனன் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-9-90)

# சங்கக்கிளை மீண்டும் திறப்பு

யாழ், ப.நோ.கூ. சங்கத்தின் கிளை இல. 12 ஏ, மீண்டும் யாழ். பருத்தித்துறை வீதியில் வீரமாகாளி அம்மன் கோவிலுக்குச் சமீபமாக உள்ள கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது மேற்படி கிளை மூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-130)

# வாசகர் திருமுகம்

## கவனம் செலுத்துவார்களா?

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'' என்கிறது தமிழ்முனிவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறள். ஆனால் யாழ். குடாநாட்டு விவசாயிகளைப் பொறுத்தவரையில் மேற்படி குறளானது ''தொழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் உழுதுண்டு பின் செல்பவர்'' என்றே அமைந்து விட்டது போலும்.

பல்வேறு செலவீனங்களின் மத்தியில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களுக்கு சந்தைகளில் உரியவிலை கிடைப்பதில்லை. அத்துடன் இடைத்தரகர்கள் மற்றும் வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு பொருள்களைப் பெற்று தாம் அதிக இலாபத்தைத் தேடிக் கொள்கின்றனர்.

யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான சந்தை ஒன்றில் இன்று கீரைக்கடை படும்பாடு சொல்லில் அடங்காது. 45 ரூபாவுக்கு மண்எண்ணெய் வாங்கி இறைத்து வளர்த்தெடுத்த கீரை சந்தைக்குக் கொண்டுவரப்பட்டதும் அதில் இலாபம் தேடுபவர் வியாபாரியும் இடைத்தரகர்களுமே. கீரைக்கு நேர்ந்த கதியே வாழைக்குலைக்கும் உருளைக்கிழங்குக்கும் நடந்து வருகின்றது.

இலங்கையின் ஏனையபகுதி விவசாயிகளுக்குக் கிடைக்கும் கடன்களோ, சலுகைகளோ, சந்தை வாய்ப்புக்களோ குடாநாட்டு விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. குடாநாட்டுக்கும்— வெளியிடங்களுக்குமான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை குடாநாட்டு விவசாயிகள் அனுபவித்த கஷ்டங்கள் ஏராளம்.

இவற்றையெல்லாம் தீர்த்து வைக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழர்களின் பிரதிநிதிகள் எனத்தம்மைக் கூறிக்கொள்பவர்கள் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

க. கஜேந்திரன்

உரும்பிராய்.

## யாருக்கு எடுத்துரைப்பது?

துன்னாலை – கலிகைச் சந்தியிலிருந்து வடக்காக மந்திகை யூடாக பருத்தித்துறைக்கு ஒரு பிரதான வீதிசெல்கிறது வடமராட்சியிலுள்ளபிரதானவீதிகளுள் இதுவும் ஒன்று இந்த வீதியால் பேருந்துகள் சில செல்கின்றன. தனியார் மினி பஸ்கள் செல்கின்றன. மற்றும் பாரமேற்றிய உழவு யந்திரங்கள். லொறிகள், மாட்டு வண்டில்கள்போய் வருகின்றன. பாடசாலை மாணவ, மாணவியர் சைக்கிளில் போய் வருகின்றனர். கட்டைவேலி — கரவெட்டி வாசிகளுக்கும் இதுவே பிரதான போக்குவரத்துப் பாதை ஆகும்.

இவ்வாறான பிரதான வீதியின் அவலத்தை யாருக்கு எடுத்துரைப்பது? கலிகைச் சந்தியிலிருந்து வடக்கே கால் மைல் தூரத்துக்கு வீதி பராமரிப்பின்றி குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது. அப்பால் துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் வரையும் குண்டு குழிகளை மறைத்து தார் ஊற்றியதால் சிறிது நிம்மதியாகப் போக வர உதவியுள்ளனர். அப்பால் கோயிற்கடவை இறக்கம் வரை பழைய கதைதான். அந்த இடத்தில் இருந்து துன்னாலை முருகன் கோயில் வரையும் இரக்கம் காட்டியுள்ளனர். முருகன் கோயிலடியிலிருந்து மந்திகை ஆஸ்பத்திரி வரையும் மகா மோசம்.

இவை ஒருபுறமிருக்க மந்திகை ஆஸ்பத்திரியின் முன்புறம் எவ்வளவு அழகாக உள்ளதோ அதற்கு மாறாக கிழக்கெல்லை ஒரே பற்றையும் செடியுமாகக் காட்சி அளிக்கிறது.

அந்தோ! பரிதாபம். கலிகை — துன்னாலை வீதியே நீ என்ன பாவம் செய்தாய்? பாரபட்சம் காட்டுவதேன்?

ம. பரமநாதன்

துன்னாலை மத்தி.

## தபாற்சேவை சீர்கேடு

கப்புது கிராமம் கரவெட்டிக்குத் தெற்கே சுமார் 7 மைல்களுக்கு அப்பாலுள்ளது. இங்கே ஒரு பாடசாலை தொடர்ந்து இயங்குகின்றது. வெளி இடங்களிலிருந்து இப்பாடசாலைக்குத் தினமும் ஆசிரியர்கள் வந்து போகிறார்கள். இங்குள்ளவர்கள் தங்கள் தேவைகளுக்கு எவ்வித தடையுமின்றிப் பிற இடங்களுக்குப் போய் வருகிறார்கள். இங்கு எவ்வித நெருக்கடியுமில்லை. கூட்டுறவுப் பண்டகசாலை சரிவர இயங்குகின்றது. இங்குள்ள கப்புது உப தபாலகம் ஒழுங்காக இயங்கி வருகின்றது. ஆனால் கரவெட்டித் தபாற் கந்தோரிலிருந்து தினம் வந்துபோகும் தபாற் சேவகர் ''ரவுண்ட்ஸர்'' ஆகியோர் இங்கு நெருக்கடி என்று சாட்டுக்கூறி வராமலிருக்கிறார்கள். இதையிட்டுக் கரவெட்டித் தபாலக அதிபரிடம் பலமுறை முறையிட்டும் ஒரு பயனும் இல்லை.

பாடசாலைக்கும், பண்டகசாலைக்கும், கி. அ. சபை, சனசமூகநிலையம், சிக்கன க. வ. கூ. சங்கம் என்பவற்றுக்கும் பொது மக்களுக்கும் வரும் கடிதங்கள் வராமையால் பலவித நிர்வாக இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. எனவே இதனோடு தொடர்பான தலைமை அதிகாரிகள் இப்பிரச்சினைகளைத் தீர்த்து கிராமம் ஒழுங்கான தபாற்சேவையைப் பெற ஆவன செய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஓய்வுபெற்ற அதிபர்

கப்புது.

# வலி.மேற்கில் நெற்செய்கை ஊக்குவிப்புக்குப் புதிய திட்டம்

மூளாய்,ஓக.14

வலிகாமம் மேற்கில் நெற்செய்கையை ஊக்குவிப்பதற்கு புதிய உதவித் திட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

இந்த உதவித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த ஆண்டுக்கான பெரும்போகத்தின்போது நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதிக விளைச்சலைத் தரக்கூடியதும், விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்டதுமான புதிய நெல் வர்க்கங்கள் விதை நெல்லாக விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன. அத்துடன் விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புக்களும் ஒழுங்கு செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை அவ்வப்பகுதி விவசாய சம்மேளனங்கள் மேற்கொண்டு வருகின்றன. (இ-99)

## 4 வயதுச் சிறுவன், தந்தை கோடரி வெட்டில் காயம்

நித்திரையில் இருந்தவேளை கோடரியினால் வெட்டியதால் இருவர் காயமடைந்தனர்.

உரும்பிராயில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணிக்கு இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் செல்லத்துரை கனகராசா (வயது 28) அவரது மகனான கனகராசா நிலாம்ஸ் (வயது4) ஆகிய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் தகப்பன் சுயநினைவிழந்து ஆபத்தான நிலையில் உள்ளார்.

கோடரியால் வெட்டியதாகக் கூறப்படும் நபர் கோப்பாய் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர்தாக்குதலுக்கு இலக்கானவரின் மைத்துனர் என்று தெரிவிக்கப் பட்டது.

(இ-9-15)

## யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 74,738 பேர் கிளிநொச்சியில்!

வவுனியா,ஓக.14

யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த 74 ஆயிரத்து 738 பேர் இடம்பெயர்ந்து தற்போது கிளிநொச்சியில் தங்கி உள்ளனர் என்று வன்னியில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியில் தற்பொழுது ஒரு லட்சத்து 48ஆயிரத்து 298பேர் வசித்து வருகின்றனர். இவர்களில் ஒரு லட்சத்து 28ஆயிரத்து 815பேர் இடம் பெயர்ந்து சென்று அங்கு அகதிகளாகத் தங்கி உள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த 65 பேரும், திருகோணமலையைச் சேர்ந்த 409 பேரும், வவுனியாவைச் சேர்ந்த 252பேரும்,மட்டக்களப்பைச் சேர்ந்த 36பேரும்,முல்லைத்தீவைச் சேர்ந்த 4ஆயிரத்து 598பேரும் இங்கு வசித்து வருகின்றனர்.

தென்மராட்சியைச் சேர்ந்த ஆயிரத்து 135 குடும்பங்களை உள்ளடக்கிய 43ஆயிரத்து 406பேர் அங்கு உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5-164)

## பொலீஸ் அதிகாரிக்கு கத்திக் குத்து

கொழும்பு,ஓக.14

பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனத்தேடப்பட்டு வந்த - இராணுவத்திலிருந்து தப்பியோடிய நபர் ஒருவரைக் கைதுசெய்யமுயன்ற பொலீஸ் அதிகாரியை அந்த நபர் கத்தியால் குத்திக் காயப்படுத்தினார்.

கடுகண்ணாவ பொலீஸ் பிரிவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பொலீஸ் அதிகாரியைக் குத்திவிட்டுத் தப்பியோட முற்பட்ட பிரஸ்தாப நபர் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர் காயமடைந்தார். காயமடைந்தநிலையில் கண்டி ஆஸ்பத்திரியில் 17ஆம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த இந்நபர் அங்கிருந்தும் தப்பிச் சென்று விட்டதாக ஆஸ்பத்திரிப் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-6)

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ். இலுப்பையடிச் சந்திப் பகுதியில் வெள்ளியன்று இடம்பெற்ற 'பிக்அப்'-வாகனம் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் காயமடைந்தார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த அரியரட்ணம் கேமச்சந்திரன் (வயது50) என்பவரே காயமடைந்தவராவார்.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதனின் 'பிக் அப்' வாகனமும் மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாகின.

விபத்தில் காயமடைந்தவரை உடனடியாகத் தனது வாகனத்தில் ஏற்றிச் சென்ற பிரதேச சபைத் தலைவர் திரிலோகநாதன் அவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தார். (ஐ-5-9)

## சுகாதாரம் பேண நடவடிக்கை

மூளாய்,ஓக.14

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களில் இலையானின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான நடவடிக்கைகளை வலி.மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. (இ-99)


உ

யாழ். கோப்பாய் வடக்கில் எழுந்தருளியிருக்கும்

**அருள்மிகு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்**

**பேரன்புடைய ஸ்ரீமத் நாராயண பக்தர்களே!**

கோப்பாய் வடக்கில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நிகழும் விக்கிரம வருடம் ஆடி 30ஆம் நாள் இன்று (14-08-2000) திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் நிகழும் தேவசங்க சுப வேளையிலும் திருவோண நட்சத்திரத்திலும் கொடியேற்றம் நடைபெறும். பின்னர் தொடர்ந்து 11 நாள்கள் உற்சவம் சிறப்பாக நடைபெறும்

உற்சவ கால விபரங்கள்

| | | |
|---|---|---|
| 14-08-2000 | திங்கட்கிழமை | கொடியேற்றம்: |
| 20-08-2000 | ஞாயிற்றுக்கிழமை | ஈஸ்வரிமார் திருநாள் |
| 21-08-2000 | திங்கட்கிழமை | வேட்டைத்திருநாள் |
| 22-08-2000 | செவ்வாய்க்கிழமை | சப்பறத்திருநாள் |
| 23-08-2000 | புதன்கிழமை | உறியடி உற்சவம் |
| 24-08-2000 | வியாழக்கிழமை | தீர்த்த, கொடியிறக்கத் திருநாள், மாலை மாவிளக்கிடுதல், திருவூஞ்சல் இடம்பெறும். |
| 25-08-2000 | வெள்ளிக்கிழமை | ஆஞ்சநேயர் பொங்கல் |

தினந்தோறும் காலை 9.30 மணிக்கு பூஜை ஆரம்பமாகி 10 மணிக்கு நாகஸ்தம்ப அபிஷேகம் பூசை நடைபெற்று 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து எம்பெருமாள் உள்வீதிவலம் வருவார்.

**ஸ்ரீமத் நாராயண பக்தகோடிகள் அனைவரும் வந்து பெருமாளைச் தரிசித்து பிறவிப் பயனை நுகர்வீர்களா!**

*ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம்.*

கோப்பாய் வடக்கு.

மஹோற்சவம் சிறப்புற வாழ்த்துபவர்கள்:-

**துயா நகைப் பூங்கா**

விளையாட்டரங்க வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

213,C கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(c/12491)


## யாழ்.மாவட்ட கலைஞர்கள் விவரம் திரட்டப்படுகிறது

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் கலைஞர்கள் பற்றிய விவரங்களைத் திரட்டுவதற்கு யாழ்.செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் இந்த விவரங்களைத் திரட்டுவதற்குரிய பணிப்புரைகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாகச் செயற்பட்டு வரும் கலாசார உத்தியோகத்தர்கள் இந்த விவரம் திரட்டும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இசை, சிற்பம், ஓவியம், இலக்கியம், பத்திரிகைத்துறை போன்ற துறைசார்ந்த கலைஞர்களின் விவரங்களே திரட்டப்பட்டு வருகின்றன. (இ-99)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி பராசக்தி விஜயரட்ணம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி விஜயரட்ணம் 12-08-2000 சனிக்கிழமை அன்று ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விஜயரட்ணத்தின் (மாத்தயா - இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும், நடராஜா (லண்டன்), கந்தசாமி (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரியும், சிவநேசன் (ஸ்கந்தபுரம்), சத்தியநேசன் (சாவகச்சேரி), சிவசக்தி (பபாஃபி ஆசிரியர் கலாசாலை), கிரிஜாசக்தி (ஜேர்மனி), ஜெகநேசன் (ஜேர்மனி), விஜயநேசன் (சாவகச்சேரி), ஞானசக்தி (யாழ்.பல்கலைக்கழகம், பொருளியல் சிறப்புக்கலை, இறுதிவருடம் B) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயமதி, பரமேஸ்வரி, பரமானந்தம், நாகேஸ்வரன், தமயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், பவித்திரா, விதுர்சன், ஷர்மிலன், பிரபா, சங்கவி, சஞ்ஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13-08-2000) ஞாயிற்றுக்கிழமை 599, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ச. பரமானந்தம்** (மருமகன்)

"பிருதுவி"
34, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(77275)

### பொன்னையா கோபாலன்

(பிரபல மெக்கானிக் - கந்தர்மடம்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கோபாலன் நேற்று(13-08-2000)ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நாகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், பொன்மணியின் அன்புக்கணவரும், வளர்மதி, மாலதி, வசந்தி, செல்வதி, நவநீதரன், சிறிதரன், யசோதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகனசுந்தர், சிவாஸ்கரன், ஸ்ரீனிவாசன், ரவீந்திரன், கோமதி, சுதா, யாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும், குணபாலசிங்கம், கணேசலிங்கம், கனகரத்தினம் (கனகு கராஜ், திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-08-2000) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**பொ.நவநீதரன், கோ.யசோதரன்**
(மகன்மார்)

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு.

(77277)

### திருமதி இரத்தினம் வைரமுத்து

பிரதான வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இரத்தினம் வைரமுத்து நேற்று (13-08-2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காங்கேசன்துறை நடிகமணி வீ.வி.வைரமுத்து அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், வசந்தா, லலிதா(ஜேர்மனி), வனிதா, ஜெயந்தா, சாரங்கன் (ஜேர்மனி), மணிமேகலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஐயாத்துரை, நவரத்தினம் (ஜேர்மனி), தவராஜா (நெதர்லாந்து), ரவீந்திரா (ஜேர்மனி), சுமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கனகரத்தினம், இராசமணி, தவமணி, காலஞ்சென்ற மாசிலாமணி, அஸ்வத்தம்மா, பாவநாசிவம்(பொலீஸ் இன்ஸ்பெக்டர்), பாலசரோஜா, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வகுமார்(லண்டன்), ராஜ்குமார், வசந்தகுமார்(ஜேர்மனி), பிரதாபன், ஜெயவாணன், நீலாம்பரன்(ஜேர்மனி), பிரவீன்(ஜேர்மனி), ஜனார்தன்(ஜேர்மனி), அஜெந்(ஜேர்மனி), சாருஜன்(ஜேர்மனி), விஜிதா ஜீவானந்தம், சுகிதா வரதன்(சுவிஸ்), கவிதா குகன்(சுவிஸ்), யசோதா லூயிஸ்(சுவிஸ்), ஜெகதா பாபு, அமுதா, பவிதா, சிந்துஜா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தனுஷன் பானுஜன், ஜெனிபர், நரேன், அபிரதன்(சுவிஸ்), கோபிஷா, சுபாங்கி(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-08-2000) திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் நாகம்மாள் கோயில்வீதி, உடுவில்கிழக்கு, சுன்னாகத்தில் நடைபெறும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**திருமதி வசந்தா ஐயாத்துரை**

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(77276)

### அரியகுட்டி சச்சிதானந்தம்

ஏழாலை மத்தியைச் சேர்ந்த அரியகுட்டி சச்சிதானந்தம் 10.08.2000 அன்று புதுக்குடியிருப்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - தங்கம்மா தம்பதியினரின் மகனும், அற்புதமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நல்லையா, மல்லிகாராணி மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தரூபி, சுதர்சினி, ஜெயரூபன் (டோகா), ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபதா, சுரேஸ்(ஜேர்மனி), மதீஸ்வரன், மோகனப்பிரியா, நவதாஸ் ஆகியோரின் மாமனாரும், அனோஜன், விக்னேஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12-08-2000 அன்று புதுக்குடியிருப்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**ந. மதீஸ்வரன்**
(மருமகன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(77274)

# கப்பலில் பயணம் செய்பவர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து சிவில் அதிகாரி விளக்கம்

**யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்குப பயணம் மேற்கொள்வதற்குப் பயணிகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி கேணல் ஜனாப் ஹமீம் உதயனுக்கு வழங்கிய செவ்வி இது.**

*கேள்வி:-* கப்பல் பயணிகள் பயணச்சீட்டுப் பெறுவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நடை முறைகள் எவை?

*பதில்:-* முதலில் பயணி ஒருவர் தமது பிரிவுப் படையணி அலுவலகத்தில் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து பயண அனுமதியைப் பெற வேண்டும். பயண அனுமதியைப் பெற்றதும் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவைச் செய்ய வேண்டும். அத்துடன் பயணத்துக்கான திகதியைப் பெறவேண்டும். அதன் பின்னர் பயண அனுமதிப் பத்திரத்தை (Travel Permit) சிவில் அலுவலகத்தில் பெற வேண்டும். அந்தப் பத்திரத்தின் மூலப்பிரதியையே பயணி பெற்றுக் கொள்ள வேண்டும்.

*கேள்வி:-* பயண அனுமதிப் பத்திரத்தைப் பெற்ற பின்னர் எவ்வாறு பயணச்சீட்டைப் பெறுவது?

*பதில்:-* பயணச்சீட்டு வழங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள முகவர் தினமும் மாலையில் சிவில் நிர்வாக அலுவலகத்தில் பிரசன்னமாகி பயண அனுமதிப் பத்திரத்தின் இரண்டாவது பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

பயணி சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பயண அனுமதிப் பத்திரத்தின் மூலப்பிரதியை முகவரிடம் சமர்ப்பித்தால், தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டையைப் பரிசீலித்து பயணச்சீட்டை அவர் வழங்குவார்.

பயணச்சீட்டு வழங்கும் முகவர் பயணியிடம் உள்ள மூலப்பிரதியையும், சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெற்ற இரண்டாவது பிரதியையும் பரிசீலனை செய்த பின்னர் அதற்கான பயணச்சீட்டை வழங்குவார்.

பயண அனுமதிப்பத்திரம் பெறாத எவருக்கும் முகவர் பயணச்சீட்டை வழங்க முடியாது.

பயணச்சீட்டு வழங்கும்போது அதனுடன் பயண அனுமதிப் பத்திரத்தின் மூலப் பிரதியையும், இரண்டாவது பிரதியையும் முகவர் பயணியிடம் வழங்குவார்.

*கேள்வி:-* பயண அனுமதிப் பத்திரம், பயணச்சீட்டு ஆகியவற்றைப் பெற்ற பின்னர் பயணி என்ன செய்ய வேண்டும்?

*பதில்:-* பயணச்சீட்டில் குறிப்பிட்ட திகதியில் பயணி சிவில் நிர்வாக அலுவலகத்தில் பயண ஏற்பாடுகளுடன் பிரசன்னமாக வேண்டும்.

அங்குள்ள அதிகாரியிடம் இரு பிரதிகளையும் தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டையையும் சமர்ப்பிக்க வேண்டும். பயணம் செய்பவர்களின் பட்டியலில் அவரது பெயரை அந்த அதிகாரி பதிவு செய்வார்.

அந்தப் பட்டியலில் பெயரைப் பதிவுசெய்த பின்னர் பயணி தமது பயணப் பொதிகளை அங்குள்ள பொலீஸ் அதிகாரியிடம் கொடுத்து பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அதன் பின்னர் அங்கு தரித்துள்ள பஸ்ஸில் ஏறி அமரவேண்டும்.

பொலீஸ் பாதுகாப்புடன் அந்த பஸ் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்லும். பஸ் புறப்படுவதற்கு முன்னர் பயணி தனது அடையாள அட்டை, பயண அனுமதிப் பத்திரம், பயணச்சீட்டு ஆகியவற்றை அங்கு பெற்றுக் கொள்ள வேண்டும்.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு காலை 8மணிக்கு வரும் பயணி மாலை 5மணிக்கே கப்பலில் ஏறமுடியும். எனவே பயணிகள் தமக்குத் தேவையான மதிய உணவு மற்றும் குடிதண்ணீர் போன்றவற்றைத் தம்முடன் எடுத்து வர வேண்டும்.

பயண அனுமதிப்பத்திரம் இல்லாது வரும் எந்தப் பயணியையும் கப்பலில் ஏற சிவில் நிர்வாக அலுவலகம் அனுமதிக்கமாட்டாது.

இந்த நடைமுறைகளின்படி பயணிகள் நடப்பதன் மூலம் போக்குவரத்தை எந்தவித சிரமமுன்றி ஒழுங்குசெய்ய முடியும். ★

# குடியரசு தின நிகழ்வில் வைத்து வாஜ்பாயைக் கொல்லச் சதி; அம்பலமானதாகத் தகவல்!

## பாக். உளவுப் பிரிவு அதிகாரி டில்லியில் கைது

இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயைப் படுகொலை செய்யும் நோக்கத்துடன் புதுடில்லியில் தங்கியிருந்ததாகக் கூறப்படும் பாகிஸ்தான் உளவுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவரை புதுடில்லிப் பொலீஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இந்தியாவின் 53ஆவது குடியரசு தினமான நாளை பொது வைபவங்கள் நடைபெறும்போது அதில் கலந்துகொள்ளும் பிரதமர் வாஜ்பாயைக் குண்டு வைத்துக் கொலை செய்ய ஜன்னத்குல் என்ற மேற்படி சி.ஐ.டி. அதிகாரி திட்டம் தீட்டியிருந்தார் எனப் புதுடில்லிப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி படுகொலை தொடர்பான தகவல் கிடைத்ததை அடுத்து உடனடி விசாரணை மேற்கொண்டு படுகொலையின் சூத்திரதாரியிடம் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றையும், 10கிலோ ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்துகளையும் தாம் கைப்பற்றியதாகவும் பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது:

குண்டுகளைக் குறித்தநேரத்தில் வெடிக்கவைக்கப் பயன்படும் 6வெடிமருந்து உபகரணங்கள், 6 பற்றரிகள் மற்றும் 38 துப்பாக்கி ரவைகள் என்பனவும் -

மேற்படி நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை -

மேற்படி நபர் கொடுத்த தகவலின் பேரில் குடியரசு தினவிழா நடத்தவென உத்தேசிக்கப்பட்டிருந்த நிஜாமுதீன் பகுதியில் உள்ள குஷ்ரோ பூங்காவில் புதைத்து வைக்கப்பட்டிருந்த - குறித்த நேரத்தில் வெடிக்கும் இரண்டு குண்டுகள் மீட்கப்பட்டன எனவும் -

பிரதமர் வாஜ்பாயைப் படுகொலை செய்யவே பாகிஸ்தான் உளவுப்படை தன்னை அனுப்பியதாக அவர் தெரிவித்தார் எனவும்-

மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-6)

# பதவி விலக சிறிமாவோ நிர்ப்பந்திக்கப்பட்டார்!

## மகன் அனுரா கூறுகின்றார்

கொழும்பு,ஓக.14

"பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறு சிறிமாவோ பண்டாரநாயக்க நிர்ப்பந்திக்கப்பட்டார் என்றே நான் கருதுகின்றேன்."

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சிறிமாவோவின் மகனுமான அனுரா பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் பதவியிலிருந்து எனது தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்க திடீரென அகற்றப்பட்டுள்ளார்.அவரைப்பதவி விலக்கிய நடவடிக்கை எனது மனதைக் குழப்புகிறது.

"தேர்தல் பிரசார வேலைகளின் இறுதிக் கட்டத்தில்தான் தான் பதவி விலகப் போவதாக அவர் என்னிடம் தெரிவித்திருந்தார். அவர் பதவி விலகிய பின்னர் இரு தடவைகள் அவரைச் சந்தித்தேன். அவர் பதவி விலகுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார் என்றே நான் கருதுகிறேன்.

"அவர் பெரிதும் பலவீனமடைந்திருப்பதனால் ஒரு சில வார்த்தைகளையே பேசுகின்றார்.

"பதவி விலகல் கடிதம் தயாரிக்கப்பட்டு கையொப்பத்துக்காக அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது இப்படி அனுரா மேலும் கூறினார்.

# மகாநாயக்கர்களுடன் ஆலோசித்த பின்பே இனிமேல் அரசமைப்பு சீர்திருத்தப்படும்

## அவர்களின் ஆசியைப் பெற்ற பின்னர் புதிய பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.14

எதிர்காலத்தில் அரசமைப்பில் சீர்திருத்தம் செய்யும்போது மகாநாயக்கர்களுடன் கலந்து ஆராய்ந்த பின்னரே நாடாளுமன்றத்தில் அந்தச் சீர்திருத்தம் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

கண்டி தலதா மாளிகைக்குச் சென்று மகாநாயக்கர்களிடம் ஆசி பெற்ற பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மகாநாயக்கர்களுடன் இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டால் அதன் உள்ளடக்கம் குறித்துச் சந்தேகங்களோ, ஆட்சேபங்களோ எழுப்பப்படுவதற்கு இடம் இல்லாமல் போய்விடும்.

ஒவ்வொரு பந்தியையும், வரிகளையும்கூட அவர்களிடம் சமர்ப்பிப்போம். நாம் தவறுவிடும் விடயங்களை இனங்கண்டு அவர்கள் திருத்த முடியும்.

மிகவும் முக்கியத்துவம்வாய்ந்த விடயமான பௌத்த மதத்தைப் பாதுகாத்தல், மேம்படுத்தல், முன்னேற்றுதல் என்பன தொடர்பாக ஜனாதிபதி மிகவும் விழிப்புடன் இருக்கிறார். பௌத்தமதம் தொடர்பான முழு விடயமும் அரசமைப்பில் சேர்க்கப்பட்டுவிடும்.

மகாநாயக்கர்களுக்கு உடன்பாடு இல்லாத பிரிவுகள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடப்படும். அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு அதனடிப்படையில் அந்தப் பிரிவுகளில் திருத்தம் செய்யப்படும் - என்று அவர் கூறினார்.

அங்கு பேசிய கடற்றொழில், நீர்வள அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ கூறியதாவது:-

பொதுத்தேர்தல் மூலம் தெரிவாகும் புதிய நாடாளுமன்றத்தைச் சட்ட நிர்ணய சபையாக மாற்றி அதில் அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகலைச் சமர்ப்பித்து, விவாதித்து நிறைவேற்ற ஏற்பாடு செய்துள்ளோம். அப்படிச் செய்யும்போது சாதாரண பெரும்பான்மையுடன் புதிய அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற முடியும் எனக் கருதுகின்றோம். அப்போது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினரின் ஆதரவு பெறவேண்டும் என்ற பிரச்சினைக்கு இடமில்லாமல் போய்விடும் என்று தெரிவித்தார்.

மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்த பிரதமர் அவர்களிடம் ஆசிபெற்றதுடன் பிரித் நூலையும் பெற்றார்.

(உ-3)

# மடுத் திருப்பதியில் நாளை உற்சவம்!

கொழும்பு,ஓக.14

மடுத் திருப்பதியின் வருடாந்த உற்சவத்தின் கடைசி நாள் நிகழ்வுகள் நாளை காலை இடம்பெறவுள்ளன.

இந்த உற்சவத்தில் பங்குபற்றுவதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் தெற்கிலிருந்து அங்கு சென்றுள்ளனர்.

யாழ்.ஆயர் அதி.மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார்ஆயர் அதி. மேதகு இராயப்பு யோசப் ஆகியோர் நாளை விசேட திருப்பலியை ஒப்புக் கொடுப்பர்.

இந்த உற்சவத்தில் ஐ.தே.க. தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா கலந்து கொண்டு நடமாடும் வைத்திய நிலையம் ஒன்றை நடத்தவுள்ளார்.

மடுத் திருப்பதி அமைந்துள்ள பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

# மாகாண சபையின் நடமாடும் சேவை

## இங்கு 17,18 ஆம் திகதிகளில்!

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ். மாவட்டத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் நோக்கில் வடக்கு-கிழக்கு மாகாண சபை ஏற்பாடு செய்துள்ள நடமாடும் சேவை எதிர்வரும் 17ஆம், 18 ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி, யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய மகாண அரசுகளின் கீழுள்ள திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நடமாடும் சேவையின் போது பொதுமக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எழுத்து மூலமாகச் சமர்ப்பித்து அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் -

உடனடியாகத் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை நடமாடும் சேவையில் கலந்து கொள்ளும் அதிகாரிகள் மேற்கொள்வர் எனவும்-

தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் - கேட்கப்பட்டுள்ளது.

(உ-7)

# ஆரம்ப சுகாதார நிலையம் திறப்புவிழா

வலி.கிழக்கு,ஓக.14

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நிதி உதவியுடன் பண்ணாகத்தில் 5லட்சம் ரூபா செலவில் புதிதாக நிறுவப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நீண்டகாலமாக தனியார் கட்டடத்தில் இயங்கிவந்த இந்த சுகாதார நிலையத்தை நிறுவவென அப்பகுதியைச் சேர்ந்த காலஞ்சென்ற குடும்பநல உத்தியோகத்தர் அமிர்தவல்லி பரமகுரு ஞாபகார்த்தமாக மூன்று பரப்புக் காணியை அவரின் மகள் ஸ்ரீதரன் பரமாநதவல்லி என்பவர் அன்பளிப்புச் செய்திருந்தார்.

இந்த சுகாதார நிலையத்துக்கான தண்ணீர் வசதியை பட்டினிக்கு எதிரான இயக்கம் வழங்கி உதவியுள்ளது

(இ-180)

# நவீன, உயர்ரக ஆயுதங்களை புலிகளும் சுவீகரித்துள்ளனர்?

கொழும்பு,ஓக.14

யுத்தத்துக்குத் தேவையான ஆயுதத் தளபாடங்களை அரசுத் தரப்பு வாங்கிக் குவிப்பது ஒரு புறம் நடந்துகொண்டிருக்க-

மறுபுறத்தில் நவீன - உயர்ரக - ஆயுதங்களை விடுதலைப் புலிகளும் பெற்றிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன என்று கொழும்பில் பிரபல இராணுவ விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசுப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் மீண்டும் வெடிக்கும் போது புலிகள் பெற்றுள்ள புதிய - நவீன - ரக ஆயுதங்களின் தீங்கு பயக்கும் தன்மை வெளிப்படுத்தப்படும் என்றும் -

அது யுத்தத்துக்கு வேறு பரிமாணத்தைக் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் -

அந்த விமர்சகர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்குக்கு வெளியே கொழும்பிலும் ஏனைய இடங்களிலும்கூட புலிகளின் செயற்பாடுகள் மந்த நிலையிலேயே உள்ளன. இந்தப் பிரதேசத்தில் அவர்களின் செயற்பாட்டு அமைப்பு செயலிழந்துவிட்டது என்பதல்ல இதன் அர்த்தம். தலைமறைவாக - அமுங்கியிருக்கும் -தமது செயலணியைத் தேவைப்படும்போது ஊக்கத்துடன் செயற்படுத்தச் செய்வது விடுதலைப் புலிகளின் வழமை என்பது யாவருக்கும் தெரிந்ததே.

ஆயுத தளபாட ரீதியிலும், ஆள் வலுவிலும் ஒரு மூச்சுவிடும் காலம் விடுதலைப் புலிகளுக்கு தேவைப்படுகின்றது. யுத்தத்தில் மந்த நிலை காணப்படுவதற்கு அதுதான் காரணம்.

தேசிய மட்டத்தில் அரசியல் தலைமைத்துவம் பலவீனம் அடைவது புலிகளுக்கு மிகவும் வாய்ப்பானதாகும். அதைத்தான் எதிர்பார்த்துப் புலிகள் காத்திருக்கின்றார்கள். பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு பலமான அரச தேவை என்பது தான் எமது படிப்பினை.

- இப்படி அந்த விமர்சகர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

# ஆலயங்களில் உபகர்ம நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.14

அந்தணர்களால் வருடந்தோறும் மேற்கொள்ளப்படும் பூணூல் மாற்றுதல் என்னும் 'உபகர்மம்' நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் நடைபெறவுள்ளது.

நல்லூர் சிவன்கோயில், மாதகல் அரசடிப்பிள்ளையார், கந்தரோடை வட்டக்கை அம்மன்கோயில் மற்றும் மயிலணி கந்தசுவாமி கோவில், நீர்வேலி கந்தசுவாமி கோயில், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில், சங்கானை வெல்வில் முருகன் கோயில், துன்னாலை அல்லையம்பதி முருகன் கோயில், அல்வாய் வீரபத்திரர் கோயில் ஆகிய ஆலயங்களிலேயே இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த ஆலயங்களில் 'உபகர்மம்' நிகழ்வை நடத்தவென ஆச்சாரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-7)

# புறக்கோட்டையில் நாளை ஹர்த்தால்

கொழும்பு,ஓக.14

கொழும்பு - புறக்கோட்டைப் பகுதி வர்த்தகர்கள் நாளை பூரண கடையடைப்பு ஒன்றை நடத்த உள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர் மற்றும் சிற்றூழியர்கள் பொதி சுமக்கும் தொழிலாளிகளால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இந்தக் கடையடைப்பு நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-6-7)

# ஈ.பி.டி.பி. சிபார்சுகளுக்கு அரசாங்க நியமனங்களா?

## சீறுகின்றார் ஆனந்தசங்கரி

கொழும்பு,ஓக.14

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் சிபார்சு செய்பவர்களுக்கே அரச நியமனங்களை அரசு வழங்குகின்றது எனத் தெரிவித்து அதைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி கண்டித்திருக்கின்றார்.

ஈ.பி.டி.பியினர் சிபார்சு செய்தவர்களை அப்படியே ஏற்றுக் கொண்டு பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு நியமனங்களை வழங்குகின்றது. ஆனால் தமிழ் மக்களை அவ்வாறு வாங்க முடியாது.

தேர்தல் காலங்களில் இத்தகைய நியமனங்கள் செய்வது முறையற்றது. இந்தியத் தேர்தல் சட்டங்களின்படி இது தேர்தல் விரோதச் செயலாகும்.

இத்தகைய நடவடிக்கைகள் தேர்தலில் ஓர் ஆசனத்தைக் கூடப் பெற்றுத் தரப்போவதில்லை. தேவையானால் ஒரு சிலர் பணம் சம்பாதிக்க இத்தகைய செயல்கள் உதவக்கூடும்.

இவ்வாறான - தவறான - செயல்களுக்குத் துணைபோக வேண்டாம் என நான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைக் கேட்டுக் கொள்கிறேன்.

- இப்படி ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்தார். (உ)

# குடாநாட்டில் படையினரின் தாக்குதல்கள் வெற்றிகரம்

## புதிய தளபதி கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ். குடாநாட்டில் தமது தாக்குதல்களை வெற்றிகரமாக மேற்கொண்டு வரும் அரசுப்படைகள், விடுதலைப்புலிகளுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருப்பதாக யாழ்.குடாநாட்டின் புதிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா தெரிவித்திருக்கின்றார்.

கடந்த மூன்றாம் திகதி அவர் யாழ்.குடாநாட்டின் புதிய தளபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

யாழ். குடாநாட்டின் பல இடங்களிலும் வன்னியில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட சில இலக்குகள் மீதும் கவச வாகனங்கள், பீரங்கிகள், விமானங்கள் ஆகியவை மூலம் படையினர் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

பல்குழல் றொக்கட் செலுத்திகள் திறம்படச் செயற்படுகின்றன.

புதிய ஆயுதங்களின் வரவு படையினரின் மனோ நிலையைப் பெரிதும் உயர்த்தியுள்ளன.

குடாநாட்டின் நிலைமை தொடர்ந்து முன்னேற்றம் அடையும் என நம்புகிறோம்.

- இப்படி யாழ். தளபதி மேஜர் ஜெனரல் விஜேந்திரா மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## படகு பழுதடைந்ததால் நடுக்கடலில்

# தத்தளித்த 8 அகதிகளை இந்திய மீனவர் மீட்டனர்

பேசாலையிலிருந்து நேற்று முன்தினம் தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த எட்டு ஈழத்தமிழ் அகதிகள் அவர்களின் படகு நடுக் கடலில் பழுதடைந்து தத்தளித்த சமயம் இந்திய மீனவர்களால் காப்பாற்றப்பட்டனர்.

பழுதடைந்த படகில் அகதிகள் தத்தளித்துக் கொண்டிருந்ததைக் கண்ட இந்திய மீனவர்கள் அவர்களைக் காப்பாற்றி தமது படகில் ஏற்றிச் சென்று இராமேஸ்வரத்தில் அதிகாரிகளிடம் நேற்றுக்காலை ஒப்படைத்தனர். அந்த அகதிகளை பொலிஸார் விசாரணை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

---

### மட்டக்களப்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சகல பட்டதாரிகளுக்கும் வேலை வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் -

கணேசமூர்த்தி உண்ணாவிரதிகளிடம் தெரிவித்தார்.

(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்) (உ-3-21)

---

### ஐ.தே.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயசூரிய உட்பட முக்கிய தலைவர்கள் சமுகம் தந்திருந்தனர். கூட்டம் ஆரம்பமாகவிருந்த சமயமே குண்டர்குழு இந்தத் தாக்குதலை நடத்தியது.

யக்கல, போகமுவ ஆகிய இடங்களிலும் இத்தகைய தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. அந்தந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த கூட்ட மேடைகளும் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டன.

தாக்குதல் நடத்திய குண்டர் கூட்டம் அங்கிருந்து சென்ற பின்னர் கூட்டம் அமைதியாக நடைபெற்றதாக ஐ.தே.கவினர் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேல்மாகாணசபை உறுப்பினர்களே மேற்கொண்டதாக கம்பஹா மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளர் ரொனால்ட் திஸநாயக்க குற்றம் சுமத்தினார். (உ-3)


**புலமைப் பரிசில்...!**

நேற்று நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் அனேக புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது.

மொத்தமாகப் பெற விரும்புவோர் கீழ்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

1) பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.
2) மொடேர்ண் ஸ்ரோர்ஸ் நெல்லியடி.
3) திருப்தி மானிப்பாய்.

(7/7837)



நேற்றைய தினம் இடம்பெற்ற

**புலமைப் பரிசில் வினாத்தாள்களை**

எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**யாழ்.கல்வி நிலையம்**

அழகால்மடம். (7/7290)



வெளிவந்துவிட்டது!

**பொதுப் பொருளாதாரம்**

இரண்டாம் பதிப்பு - 2000 A/L வினாவிடைகளுடன்

ஆசிரியர்:- வே.கருணாகரன்

★ 2000 A/L பரீட்சை வினாக்கள் அனைத்தும் விடைகளுடன் இந் நூலின் முதல் பதிப்பில் வெளிவந்து மாணவர் பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (7/7570)


## செய்தியாளர் யாழ். வருவர்

யாழ்ப்பாணம்,ஓக.14

அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த செய்தி நிறுவனங்களின் செய்தியாளர் குழு ஒன்று நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

இரு தினங்கள் இங்கு தங்கியிருக்கும் இந்தக்குழு பல தரப்பினரையும் சந்தித்து இங்குள்ள நிலைமையைக் கேட்டறியும். (உ-3)

## தவறவிடப்பட்ட பொதி

நெல்லியடி,ஓக.14

திருகோணமலையில் இருந்து கடந்த எட்டாம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'சிற்றி ஓவ் றிங்கோ' கப்பலில் பயணம் செய்த பயணி ஒருவரால் தவறவிடப்பட்டதாகக் கருதப்படும் பயணப் பொதி ஒன்று பருத்தித்துறை இறங்குதுறையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதியைத் தவறவிட்டவர் நேரில் வந்து அடையாளம் காட்டி அதனைப்பெறலாம் என இறங்குதுறைப் பொறுப்பாளர் எஸ்.சிவலிங்கம் தெரிவித்தார். (உ-3)

## கொழும்பில் நூல் வெளியீடு

கொழும்பு,ஓக.14

'தினமுரசில்' பணியாற்றும் மூத்த தமிழ்ப்பத்திரிகையாளரும் வானொலிக் கலைஞருமான கலாபூஷணம் இரா.பத்மநாதன் தினமுரசில் தொடராக எழுதிய "கோதண்டம் ஏந்திய கோமகன்" என்னும் நூலின் வெளியீட்டு விழா இன்று கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (உ-3)

---

### பயண அனுமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பித்து பயணச்சீட்டைப் பெறலாம் என்றும் -

சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாரத்தில் செவ்வாய் தோறும் இங்கிருந்து புறப்படும் கப்பலில் செல்பவர்களுக்கு சனிக்கிழமையும்-

வியாழக்கிழமை இடம்பெறும் சேவையில் பயணிப்போருக்கு திங்கட்கிழமையும் -

பயண அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

---

### ரணில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தில் பட்டலந்தையில் இயங்கியதாகக் கூறப்படும் சித்திரவதை முகாம் தொடர்பாக, நீண்ட காலம் வெளிநாடுகளில் தலைமறைவாகியிருந்து, அண்மையில் நாடு திரும்பிய சமயம் கைதுசெய்யப்பட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் தற்போது பொலீஸாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் -

அந்தச் சித்திரவதை முகாம் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையில்செயல்பட்டது என்ற சாரப்பட குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதனடிப்படையில் ரணில் மீது கிரிமினல் குற்றம் சுமத்தி அவரைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைப்பதன் மூலம் ஐ.தே.கட்சியின் செல்வாக்கை உடைக்கலாம் என்று அரசுத் தரப்புக் கருதக்கூடும் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ-3-4-7)


**BIT**

**தேர்வுப் பரீட்சை**

மேற்படி தேர்வுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வந்தடைந்து விட்டன. விண்ணப்பதாரிகள் தலைமை அலுவலகத்திலும் நெல்லியடி கிளை அலுவலகத்திலும் தொடர்புகொண்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:

விண்ணப்பதாரிகள் தம்மை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் சமுகம் அளிக்கவும்.

- இயக்குநர்

ICS

'பூ', மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம். (C/12479)


## அதிகாரப் பரவலாக்கலை எதிர்க்கும்

# சிங்களத் தீவிரவாதச் சக்திகள் ஓரணியில் இணைந்து போட்டி?

கொழும்பு,ஓக.14

அதிகாரப்பரவலாக்கலுக்கு வழி செய்யும் அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளைக் கடுமையாக எதிர்த்த சிங்களத் தீவிரவாத சக்திகளை ஒன்று திரட்டி 'முற்போக்கு மக்கள் சக்தி' என்ற பெயரில் கூட்டணி ஒன்றை அமைத்து எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளச் சில முக்கியஸ்தர்கள் தயாராகி வருவதாகச் சிங்கள நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

பௌத்த பிக்குமாரின் தேசிய சங்க சபையின் தலைமையில் அமைக்கப்படவுள்ள இந்தக் கூட்டணியில் சிங்கள உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி, பூமிபுத்திர கட்சி, பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம், இலங்கை முஸ்லிம் கட்சி உட்பட இன்னும் பல அமைப்புக்கள் சேர்ந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி கூட்டணியில் ஜே.வி.பியை இணைத்துக் கொள்ள முயற்சி எடுக்கப்படுவதாகவும் அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது. (உ-7)

## புதிய பிரதமர் கூறுகின்றார்:-

# நவீன ஆயுதங்களினால் மட்டும் யுத்தத்தை வென்றுவிட முடியாது

## மன உறுதியும் தேவை என்கிறார்

கொழும்பு,ஓக.14

"யுத்தத்தில் அதி நவீன ஆயுதங்களினால் மட்டும் ஒருபோதும் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியாது. யுத்த முனையில் பணிபுரியும் படையினரின் மன உறுதியைப் பலப்படுத்துவதன் மூலமே யுத்தத்தில் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும்."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கென கண்டியில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவை நேற்றுத் திறந்துவைத்து உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

படையினர் மத்தியில் மன உறுதி ஏற்படவேண்டுமானால் அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவேண்டும்.

படையினரின் வெற்றியே நாட்டில் நிரந்தர சமாதானத்தைப் பெற்றுத்தரும். எனவே நாட்டுப் பற்றுள்ள அனைவரும் படையினருக்காகவும், அவர்களின் குடும்பத்தினருக்காகவும் உழைக்க வேண்டும். - இவ்வாறு பிரதமர் மேலும் தெரிவித்தார். (உ-7)

## புலிகளின் சூட்டுக்கு சிப்பாய் பலி

வவுனியா,ஓக.14

வவுனியா இரணை இலுப்பைக்குளம் இராணுவச் சோதனை நிலையத்தில் இருந்து துப்புரவுப்பணிக்காகச் சென்ற சிப்பாய் ஒருவர் விடுதலைப்புலிகளின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி மரணமானார்.

நேற்று முன்தினம் அதிகாலை இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் நிசாந்த ரூபசிங்க(வயது-19) என்ற சிப் பாயே உயிரிழந்தவர்.

அவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-3)

---

### வவுனியா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் இருந்த முருகையா கணேசன்(வயது29), நல்லதம்பி ரட்ணராஜா(வயது37), சந்தனம் மகாலிங்கம்(வயது28) ஆகியோர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

உண்ணாவிரதிகளைப் பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் அங்கு சென்ற வவுனியா செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் விஜயலட்சுமி கேதீஸ்வரனை தடுத்துவைத்ததன் எதிரொலியாக -

வவுனியா செயலக அதிகாரிகள் ஞாயிறு மற்றும் போயா தினங்களில் கடமைக்கு சமுகமளிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக93 ஆம் ஆண்டு தொடக்கம் ஞாயிறு மற்றும் போயா தினங்களில் செயலக உயர் அதிகாரிகள் செயலகத்துக்கு சமுகமளித்து வந்தனர் என அரச அதிபர் தெரிவித்தார். (உ-3-164)

---

### ஷாஜகானின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் -

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேபோன்று 1998ஆம் ஆண்டு ராகிங் கொடூரத்தால் பாதிக்கப்பட்ட பேராதனைப பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவனான வரப்பிரகாஷ் சிறுநீரகச் செயற்பாடு பாதிக்கப்பட்டதால் உயிரிழந்தது தெரிந்ததே.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தற்போது கொழும்பு சென்றுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் ராகிங் தொடர்பான மோதல்களில் ஈடுபட்டதை அறிந்து அடுத்த ஓரிரு தினங்களில் அவசரமாக யாழ். திரும்புவதற்கு அவர் முயன்றுவருவதாகவும் தெரிகின்றது.

இந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தி குற்றமிழைத்தோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அவர் தீவிரமாக உள்ளார் என்று அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)


**மரண அறிவித்தல்**

**ஆறுமுகம் நிர்மலகுமார்**

(ஊழியர், வி.கந்தையா அன்சன்ஸ் - பதுளை.)

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து ஆறுமுகம்(சைவம்) அவர்களின் அன்புப் புதல்வன் நிர்மலகுமார் ஸ்கந்தபுரத்தில் 12.08.2000 அன்று காலமானார்.

அன்னார் ஆறுமுகம் - பராசக்தி தம்பதிகளின் புதல்வனும் அருட்செல்வி, சத்தியராணி, ஈஸ்வரகுமாரன்(ஏ.எல்.பி அன்கோ-ஈசன்), மேனகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆனந்தராசா, குகேஸ்வரன், சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 13.08.2000 ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வை.நமசிவாயம்,
மூதலடிவேலன்
திருநெல்வேலி. (C/12495)

தகவல்:
ஆ.ஈஸ்வரகுமாரன் (ஈசன்)
(சகோதரன்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.